# ஆசிரியர் பக்கம்

**ஆசிரியர் :** என்ன ஆலவாயா ! சென்ற மாதம் முழுவதும் உன்னைக் காணவில்லையே. ஓ! P B A ஸ்வாமியின் பங்குனி விசாகத் திருவிழாவில் நீயும் கலந்து கொண்டாயல்லவா? நானும் உன்னை அங்கே பார்த்தேனே !

**ஆலவாயன் :** ஆம் சுவாமீ! என்ன ஆனந்தம்! ஒவ்வொரு நாளும் சுமார் 100 பேர் திவ்யப்பிரபந்த சேவை செய்யும் இனிமையான ஓசை இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

**ஆசிரியர் :** ஆம் ஆலவாயா. அந்த வைபவம் P B A ஸ்வாமிக்கே உரிய தனிச் சிறப்பாகும். ஆழ்வாராசாரியர்களின் உத்ஸவம் நடைபெறுவதைப் போலல்லவா பங்குனி விசாகத் திருவிழாவும் நடக்கிறது. தம் பிறந்த நாளை ஒரு வியாஜமாக வைத்து ஸ்ரீவைஷ்ணவர்களை ஆராதித்து வருபவர் இன்றைக்கு நம் ஸ்வாமி ஒருவரே !

**ஆலவாயன் :** திவ்யப் பிரபந்த ஸேவாகாலம் நடைபெறும் போது பாசுரங்களின் அர்த்தங்களையும் அடியேன் அசை போட்டுக் கொண்டு வந்தேன். ஆனால் இடையில் ஒரு பாசுரத்தின் பொருள் புரியவில்லையே !

**ஆசிரியர்** [illegible] எந்தப்பாசுரம் அது ?

**ஆலவாயன் :** திருமங்கையாழ்வார் அருளிச் செய்த பெரிய திருமொழிப் பாசுரம் **''அஞ்சுவன் வெஞ்சொல் நங்காய் அரக்கர் குலப்பாவை தன்னை வெஞ்சின மூக்கரிந்த விறலோன் திறம் கேட்கில்''** என்ற பாசுரம். இதன் அர்த்தம் தான் புரியவில்லை.

**ஆசிரியர் :** இது எம்பெருமானுகிற நாயகனைப் பிரிந்த நாயகியின் தாய்பேசும் பாசுரம். "சூர்ப்பணகையின் காது மூக் கறுத்த எம்பெருமானுடைய தன்மையைக் கேட்க நான் அஞ்சுகிறேன்" என்று கூறுகிருள் தாய்.

**ஆலவாயன் :** இங்கு இப்பொருள் பொருந்துவதாகத் தோன்றவில்லையே! இங்கு தாய், சூர்ப்பணகையின்காதுமூக்கை அறுத்த வரலாற்றை நினைத்து அஞ்சுவதற்குக் கருத்து யாது? தன் மகளின் காது மூக்கையும் எம்பெருமான் அறுத்து விடு வான் என்று அஞ்சுகிருளோ? குணக்கடலான எம்பெருமான் விஷயத்தில் இப்படி ஒரு குணக்கேட்டை நினைப்பது தகுமோ?

**ஆசிரியர் :** துடுப்பிருக்கக் கை வேக வேணுமோ? இதற்கு ஏற்கனவே ஸ்ரீராமாநுஜர் அழகாக வுரைத்திருக் கிருர். சூர்ப்பணகையின் காது மூக்கு அறுத்த வரலாறு நினை வுக்கு வந்தவாறே ஸ்ரீராமனுக்கும் ஸீதைக்கும் இடையில் ஏற் பட்ட பிரிவுதானே நினைவுக்கு வரும். அதுபோல இப்போதும் தன்மகளுக்கும் மகளின் நாயகனுன எம்பெருமானுக்கும் இடை யில் பிரிவு ஏற்பட்டு விடுமோ? 'முன்பு ஸீதைக்காக சூர்ப்பணகை யின் காது மூக்கறுத்து துன்பத்தைத் தேடிக் கொண்டதுபோல இப்போது என்மகளுக்காக யாரையாவது நலிந்து துன்பத்தை விளைத்துக் கொண்டு விடுவானே!' என்று அஞ்சுகிருள் தாய். இதுவே ஆழ்வார் கருத்தாக எம்பெருமானுர் உரைப்பது.

**ஆலவாயன் :** என்ன அருமையான விளக்கம்! எம்பெரு மானுக்குத் தமிழிலும் இவ்வளவு புலமை உண்டு என்பதை இன்றுதான் அறிந்து கொண்டேன். அவர் ஸம்ஸ்க்ருதத்தி லேயே எல்லா நூல்களையும் அருளிச் செய்துள்ளமையால் அவருடைய தமிழ்ப்புலமை உலகுக்குத் தெரியாமலே போய் விட்டது.

**ஆசிரியர் :** அவர் திவ்யப்ரபந்தங்களை ஆதாரமாகக் கொண்டே ஸம்ஸ்க்ருத நூல்களை அருளிச் செய்திருக்கிறார். இதை P B A ஸ்வாமி பல நூல்களில் நிரூபித்திருக்கிறார். ஆழ்வார்களின் திவ்யப்பிரபந்தங்களை விசிஷ்டாத்வைத தரிசனமாக உலகம் முழுவதும் பரப்பிய பெருமை ஸ்ரீராமாநுஜரையே சேரும். அயல்நாடுகளிலும் வைணவத்தைப் பற்றிப் பலர் தெரிந்து கொண்டிருக்கின்றார்கள் என்றால் அதற்குக் காரணம் ஸ்ரீராமாநுஜர் ஒருவரே !

**ஆலவாயன் :** மற்றைய ஆசார்யர்களுக்கு இல்லாத பெருமை எம்பெருமானாருக்கு மட்டும் வரக் காரணம் என்ன?

**ஆசிரியர் :** மற்றைய ஆசாரியர்கள் ஒருவருக்கும் சுலபத்தில் அர்த்தங்களை உபதேசிக்க மாட்டார்கள். பலமுறை சோதித்தபின்பே, அருளிச் செய்வர். அதுவும் மிகவும் ரகசியமாகவே கூறுவர். ஆனால் எம்பெருமானார் அப்படியல்லர். பாருலகில் ஆசையுடையோர்க்கெல்லாம் அர்த்தங்களைக் கூறுங்கள் என்று பேசி வரம்பறுத்தார். அதனால் தான் நம் ஸம்ப்ரதாயத்திற்கு எம்பெருமானார் தரிசனம் என்று நம்பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார். கீதாசாரியன் அர்ச்சுனனுக்கு கலக்கத்தை விளைவித்து கீதையை உபதேசித்தான். எம்பெருமானார் ஆசைப்பட்டவர்களுக்கெல்லாம் உபதேசித்தார். **"செவி தாழ்த்தார்க் கெல்லாம் வார்த்தை சொல்லிப் போந்தார் உடையவர், ருசியைப் பிறப்பித்து வார்த்தை சொல்லிப் போந்தான் கீதாசார்யன்"** என்கின்றனர் நம்பூர்வர்கள். எனவே கீதாசார்யனைப் போன்றவரே எம்பெருமானாரும்.

**ஆலவாயன் :** ஆகா! கீதாசார்யனிடமிருந்து விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் ஒன்றே போதுமானது. அதுவே நமக்கு அறிவைக் கொடுக்கும்; வளர்க்கும். இதை செயலில் நிரூபித்தவர் எம்பெருமானார். அவருக்கு கீதாசார்யனே சிறப்பு மலர் வெளியிடுவது மிகவும் பொருத்தமல்லவா !

○

# ஸ்ரீராமாநுஜரைப் பற்றி. .

★ ஸ்ரீ ராமாநுஜர் கி. பி. 1017-ம் ஆண்டு (பிங்கள ஆண்டு) ஆசூரி கேசவாசாரியருக்கும் காந்திமதி அம்மையாருக்கும் திருமகனாக ஸ்ரீபெரும்பூதூரில் அவதரித்தார்.

★ இளமையில் இவர் திருப்புட்குழியில் யாதவப் பிரகாசர் என்ற அத்வைதியிடம் இளமைக் கல்விகளைப் பயின்றார். பின்னர் வேதாந்தங்களை விளக்குவதில் இவருக்கும் இவரது குருவுக்கும் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டன. தன்னைவிடத் தனது சிடன் மிகுந்த அறிவாளியாயிருப்பது கண்டு பொறாமையுற்றார் யாதவப் பிரகாசர்.

★ ஒருமுறை யாதவப் பிரகாசர் அவரை நயமாக கங்கை யாத்திரைக்கு அழைத்துச் சென்றார். வழியில் கங்கையில் தள்ளி ராமாநுஜனை மாய்த்து விடுவது, அவருடைய எண்ணம். ஆனால் பாதிவழியில் சகமாணுக்கரான கோவிந்தன் (எம்பார்) மூலம் இதையறிந்த ராமாநுசன் யாதவப் பிரகாசனை விட்டுப் பிரிந்துவிட்டார். விந்திய மலைக்காட்டில் அவர் வழிதெரியாமல் தவித்தபோது தேவப்பெருமாள் ஒருவேடனாக வந்து இவரைக் காஞ்சிபுரம் கொண்டுவந்து சேர்த்தார்.

★ தீர்த்த யாத்திரை முடிந்து திரும்பிய யாதவர், தம் சிடன் உயிருடனிருப்பது கண்டு மீண்டும் தம் சிஷ்யனாகச் சேர்த்துக் கொண்டார். அவ்வாறு காஞ்சியிலிருக்கும்போது ஸ்ரீரங்கத்திலிருந்து எழுந்தருளிய ஆளவந்தார் தூரத்திலிருந்தே ஸ்ரீராமாநுஜரைக் குளிர நோக்கி " ஆம் முதல்வன் இவன் " என்று கடாக்ஷித்தார்.

★ விரைவிலேயே மீண்டும் யாதவருக்கும் ஸ்ரீராமாநுஜருக்கும் கருத்து வேற்றுமைகள் ஏற்பட ராமாநுஜர் யாதவரை விட்டுப் பிரிந்தார்.

★ பின்னர் காஞ்சி தேவப்பெருமாளுக்கு திருவாலவட்ட (விசிறி) கைங்கர்யம் பண்ணிக்கொண்டிருந்த திருக்கச்சிநம்பி களை அனுகி அவரையே தமக்குகுருவாக இருக்கும்படி வேண்டினார். ஆனால் அவர், தாம் வைசிய குலத்தவர் என்று அதற்கு மறுத்துவிட்டார்.

★ தேவப் பெருமாளனுக்ரஹத்தால் பெரியநம்பிகள் ஸ்ரீரங்கத்திலிருந்து எழுந்தருளி ஸ்ரீ ராமாநுஜருக்கு ஸமாச்ர யணம் முதலிய பஞ்ச ஸம்ஸ்காரங்களைச் செய்து ராமாநுஜ ருக்கு ஆசார்யரானார்.

★ பின்னர் பல காரணங்களுக்காக சந்நியாசம் செய்து கொண்டார். இந்நிலையில் ஸ்ரீரங்கத்தில் ஆளவந்தார் மிகவும் தளர்ந்தவராகிவிடவே அவரை தரிசிப்பதற்காக ஸ்ரீரங்கத் திற்குப் புறப்பட்டார். இவர் ஸ்ரீரங்கம் சேர்வதற்கு முன்பே ஆளவந்தார் பரமபதித்துவிட்டார்.

★ ஆளவந்தார் நிர்வகித்து வந்த தர்சனத்தைத் தொடர்ந்து நிர்வகிப்பதற்காக அப்பட்டத்தை ராமாநுஜர் ஏற்றார். ஸ்ரீரங்கநாதனும் இவரிடம் அவ்வுலகையும் இவ்வுல கையும் ஒப்படைத்து இவரை **உடையவர்** ஆக்கினான்.

★ அப்போது ஸ்ரீரங்கம் கோயில் நிர்வாகத்தை வகித்து வந்த அமுதனாரைத் திருத்திப் பணிகொண்டார். அவரும் இவர் சீடராகி நிர்வாகமனைத்தையும் இவரிடம் ஒப்படைத் தார். ராமாநுஜரும் பல சீர்திருத்தங்களைச் செய்து ஸ்ரீரங் கத்தை மற்ற திவ்ய தேசங்களுக்கெல்லாம் ஒரு வழிகாட்டி யாக்கினார்.

★ ஸ்ரீராமாநுஜர் திருக்கோட்டியூர் நம்பிகளிடம் ரஹஸ் யார்த்தங்கள் கற்றார். திருமாலை யாண்டானிடம் திருவாய் மொழிக்கு அர்த்தம் கேட்டார். பெரியநம்பிகளிடம் மூவா யிரமும் ஆளவந்தாராழ்வார் பக்கலில் திருவாய் மொழி மூலமும் ஸ்தோத்ராதிகள் அருளிச்செய்

யும் நல்வார்த்தைகளும் கேட்டார். திருமலை நம்பிகளிடம் ஸ்ரீராமாயணம் கேட்டார்.

★ திருக்கோட்டியூர் நம்பிகளிடம் ரஹஸ்யார்த்தங்கள் கேட்பதற்கு 18 முறை அவருருக்கு நடந்தார் ஸ்ரீராமாநுஜர். அதுகண்ட மற்றவர்கள் 'ஸ்ரீராமாநுஜருக்கே இத்தனை சோதனைகள் இருந்தால் நாம் கண்டிப்பாக அவ்வர்த்தங்களைப் பெறமுடியாது என்று தீர்மானித்து, இராமாநுசரிடம் சென்று "உமக்கு நம்பிகள் அவ்வர்த்தங்களை உபதேசித்தால் எங்களுக்கு அவற்றை நீர் உபதேசிக்கவேணும்" என்று வேண்டிக்கொண்டனர். திருக்கோட்டியூர் நம்பி உபதேசிக்கும்போது "இராமாநுசா! இவ்வர்த்தங்களை நீ ஒருவருக்கும் உபதேசிக்கக் கூடாது. அப்படி மீறி உபதேசித்தால் நீ நரகத்தையே அடைவாய்" என்றார். ஆனால் ராமாநுசரோ குருவின் கட்டளையையும் மீறி, தன்னை வேண்டினவர்களுக்கு உபதேசித்து விட்டார். இது கேட்ட நம்பி மிகவும் கோபம் கொண்டு இராமாநுசனை அழைத்து விசாரிக்க, அவர் "நான் ஒருவன் நரகம் போனாலும் என்னிடம் ரஹஸ்யார்த்தங்கள் கேட்டவரனைவரும் மோக்ஷமடைவார்களன்றோ! அதுவே எனக்குப் போதும்" என்று கூறினார். அவருடைய இந்த பரோபகார எண்ணத்தைக் கண்டு மகிழ்ந்த நம்பி அவருக்கு "எம்பெருமானார்" (எமக்குத் தலைவர்) என்ற பட்டத்தை அளித்தார்.

★ எம்பெருமானாரை அடிபணிந்து கூரத்தாழ்வான் முதலியாண்டான், எம்பார், அருளாளப் பெருமாள் எம்பெருமானார் போன்ற பலர் சீடர்களாயினர்.

★ வேதவ்யாஸர் எழுதியருளிய ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு ஒரு விரிவுரை (பாஷ்யம்) அருளிச்செய்ய வேணுமென்று திருவுள்ளம் கொண்டு காச்மீரத்திலுள்ள சாரதாபீடம் வரை சென்று மிகுந்த சிரமப்பட்டு அங்குள்ள கிரந்தங்களைப் படித்துப் பின்னர் "ஸ்ரீபாஷ்யம்" அருளிச்செய்தார்.

★ அக்காலத்தில் சோழ நாட்டை ஆண்ட முதலாம் குலோத்துங்கன் தீவிரச் சைவனாக இருந்தான். அவன் சிவனைக் காட்டிலும் மேம்பட்ட தெய்வமில்லை என்று எல்லோரையும் நிர்பந்தித்து எழுதச் சொன்னான். அதற்காக ராமாநுஜருக்கு ஆளனுப்பினான். இதனால் ராமாநுஜருக்கு ஏதாவது தீங்கு வரும் என்று கருதிய கூரத்தாழ்வான் இராமாநுஜர் போல் வேடமணிந்து ராஜஸபைக்குச் சென்றார்

★ இதையறிந்த ராமாநுஜர் கூரத்தாழ்வானைப் போல் வேடமணிந்து சோழநாட்டிலிருந்து வெளியேறி கர்நாடகத்தை அடைந்தார். சோழ ராஜஸபைக்குச் சென்ற கூரத்தாழ்வான் “சிவனைக் காட்டிலும் மேபபட்ட தெய்வமில்லை” என்று எழுத மறுக்கவே, அவரது கண்களைப் பிடுங்கிவிடும்படி உத்தர விட்டான் சோழவரசன். கூரத்தாழ்வான் “தீவிர சைவனான உன்னைப் பார்த்த கண்கள் இனி எனக்குப் புண்களே” என்று கூறித் தம் கண்களைத் தானே பிடுங்கிக் கொண்டார். இவ்வாறு தர்சனத்துக்காக தர்சனத்தை இழந்தார் ஆழ்வான்.

★ கி. பி 1096ல் கர்நாடகத்திற்கு எழுந்தருளிய ராமாநுஜர் அங்கு ஆண்டு கொண்டிருந்த பிட்டிதேவன் என்ற ஹொய்சல மன்னனை ஜைனமதத்திலிருந்து திருத்தி வைஷ்ணவனாக்கினார் - 1098ல் திருநாராயணனுக்கு யாதவாத்ரி (மேல்கோட்டை) யில் ஒரு கோயிலைக் கட்டினார். உத்ஸவரான ராமப்ரியரையும் டெல்லி பாதுஷாவிடமிருந்து மீட்டு வந்து தம் **செல்வப்பிள்ளையாக்கி** ப்ரதிஷ்டை செய்து, சுற்றிலும் ஒரு அக்ரஹாரத்தை ஏற்படுத்தி திருநாராயணபுரத்தை உருவாக்கினார். இவ்வாறு சுமார் 12 ஆண்டுகள் அங்கு வாழ்ந்திருந்தார். கோயில் காரியங்களை நிர்வகிப்பதற்காக ஒரு மடத்தையும் ஸ்தாபித்தார்.

★ பின்னர் சோழவரசன் கழுத்தில் புண்ணாகிப் புழுத்து மாண்டதை அறிந்து மீண்டும் (1118ம் ஆண்டு) ஸ்ரீரங்கம் எழுந்தருளினார்.

(தொடர்ச்சி 41ம் பக்கம் பார்க்க)

# ஸ்ரீமத் பகவத் கீதை

பாரதப்போர் மூண்டு விட்டது. ‘மண்ணின் பாரம் நீக்குவதற்கே அவதாரம் செய்த கிருஷ்ணன் போரை நிறுத்தச் சென்ற(?) தூது பலிக்கவில்லை. கௌரவர்களும் பாண்டவர்களும் குருக்ஷேத்திரம் எனும் போர்க்களத்தில் எதிரெதிராக நிற்கின்றனர். யுத்தம் தொடங்கப் போகிறது. அப்போது கௌரவர்களின் தந்தையும் குருடனுமான த்ருதராஷ்டனிடம் வந்தார் வியாசர். போர் நிகழ்ச்சிகளைப் பார்க்கக் கூடிய ஞானக் கண்ணை அவனுக்கு அளிப்பதாகக் கூறினார். அவன் அதை மறுத்து, தன் நண்பனும் ஞானியுமான ஸஞ்சயனுக்கு அந்த சக்தியைத் தரும்படி வேண்டினான். வியாசரும் அவ்வாறே ஸஞ்சயனுக்கு ஞானக் கண்ணைத்தர, போர் நிகழ்ச்சிகளைக் காண்கிறான் ஸஞ்சயன். புறக்கண் மட்டுமல்லாமல் அகக் கண்ணும் குருடாகவுள்ள திருதராஷ்டிரன் தன் மக்கள் ஜயிப்பார்களா என்று அறிவதற்காக ஸஞ்சயனைக் கேட்கிறான்.

த்ருதராஷ்ட்ர உவாச. த்ருதராஷ்டன் கேட்கிறான்.

**தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸமவேதா யுயுத்ஸவ:**
**மாமகா: பாண்டவாச்சைவ கிமகுர்வத ஸஞ்சய (1)**

“ஸஞ்சயனே! அறநிலமான குருநிலத்தில் போர்புரியக் கருதிக் கூடியவர்களான என் பிள்ளைகளும் பாண்டவர்களும் என்ன செய்தார்கள்?”

நடுநிலைமை வகிக்க வேண்டிய திருதராஷ்டிரன் “என்னுடைய பிள்ளைகளும் பாண்டவர்களும்” என்று பிரித்தான். அதுவே எல்லா அழிவுக்கும் காரணம்.

ஸஞ்சய உவாச ஸஞ்சயன் சொல்கிறுன்.

**த்ருஷ்ட்வாது பாண்டவாநீகம் வ்யூடம் துர்யோதநஸ்ததா**
**ஆசார்ய முபஸங்கம்ய ராஜாவசநமப்ரவீத் (2)**

(வியாசரின் அருளால் ஞானக்கண் பெற்ற ஸஞ்சயன் போர்க்களத்தில் தான் கண்டவைகளைச் சொல்லுகிறுன்) "அரசனுன துர்யோதனன் பாண்டவர்களின் அணிவகுக்கப் பட்ட ஸேனையைக் கண்டபின் தன் வில்லாசிரியரான துரோணரை அணுகி உரைக்கிறுன். (2)

**பச்யைதாம் பாண்டு புத்ராணும் ஆசார்ய மஹதீம் சமூம்**
**வ்யூடாம் த்ருபத புத்ரேண தவசிஷ்யேண தீமதா (3)**

"ஆசாரியரே! உம்முடைய சீடனும் அறிவாளியும், துருபதனின் பிள்ளையுமான த்ருஷ்டத்யும்னனுல் அணிவகுக் கப்படும் பெரிய பாண்டவசேனையைப் பாரும். (3)

**அத்ர சூரா மஹேஷ்வாஸா : பீமார்ஜுந ஸமாயுதி**
**யுயுதாநோ விராடச்ச த்ருபதச்ச மஹாரத : (4)**

"அந்த சேனையில் பெரிய வில்லாளிகளும், பீமனுக்கும் அர்ச்சுனனுக்கும் இணையான வீரர்களும், மஹாரதர்களுமான ஸாத்யகியும், விராடனும், துருபதனும் இருக்கிறுர்கள் (என்று துரியோதனன் துரோணரிடம் சொன்னுன்) (4)

**த்ருஷ்ட கேதுச் சேகிதாந : காசிராஜச்ச வீர்யவாந்**
**புருஜித் குந்தி போஜச்ச சைப்யச்ச நரபுங்கவ : (5)**

"மேலும் த்ருஷ்டகேது, சேகிதானன், காசிராஜன், புருஜித், குந்திபோஜன், சைப்யன் ஆகிய அரசர்களும் இருக் கிறுர்கள்." (5)

**(இனி பகவத் கீதையின் எளிய பொழிப்புரை தொடர்ந்து வெளிவரும்.)**

# அன்பு

## V. பிரேமா வாதன்

அன்பை உருவகப் படுத்திக் காட்ட முடியாது. அது அகத்திலே நிகழும் நிகழ்ச்சியாதலால் அவரவர்கள் உணர்வால் உணர்ந்து கொள்ள வேண்டியதாகும். அன்பு தென்றல், வெகுளி சூறாவளி. அன்பு அளவிடவரிய சக்தி வாய்ந்தது. அன்பின் ஆற்றலுக்கு முன்னால் அதிகாரம், பணம் இவை தூசிக்குச் சமானம், அன்பின் வழியில் எதையும் ஆக்க முடியும். "அன்பின் அல்லதோர் ஆக்கம் உண்டாகுமோ ?" என்பது கம்பர் வாக்கு. சுருங்கக் கூறின் இறைவனை அன்புவலை தன்னில் சிக்குவான் என்றால், அன்பின் பெருமையைக் குறித்து யாரே புகழவல்லார் ?

பிள்ளையிடத்தில் தாய்க்குப் பாசம் (அன்பு), காதலால் கட்டுண்ட காதலர்களிடத்தில் அன்பு (காதல்), கடவுளிடத்தில் பக்தர்களுக்கு உண்டாகும் பக்தி பரவசம் என்றும் அன்பு இப்படிப் பலவகையில் அன்பு பரவியிருக்கிறது. அன்பு நிலைகண்ட பெரியோரான பொய்கையாரும், அன்பை அகலாக்கி, ஆர்வமெனும் நெய் சேர்த்து சிந்தையினைத் திரியாக்கி ஞானமெனும் சுடர் கொளுத்தி அந்தப் பிரகாசத்திலே எம்பெருமான் வடிவழகைக் கண்டார்.

உலகில் துன்பம் விரும்பும் மனிதன் இருக்க மாட்டான். இன்பம்தான் அவனுடைய குறிக்கோள். அதை அடைய அன்பு வேண்டும். இதை உணர்ந்த பெரியோராகிய நம்மாழ்வார்.

"எனக்கு ஆராவமுதாய் எனதாவியை இன்னுயிரை
மனக்காராமை மன்னி உண்டிட்டாய் இனியுன்
டொழியாய்

புனக் காயாநிறத்த புண்டரீகக் கண் செங்கனிவாய்
உனக்கேற்கும் கோலமலர்ப் பாவைக்கு அன்பா ! என்
அன்பேயோ''

என்று ''அன்பு'' என்ற சொல்லை உபயோகித்திருப்பது மிகவும் எண்ணியின்புறத் தக்கதாகும்.

உலகில் அன்பு நன்கு வளம்பிவிடின், அழுக்காறு முதலிய தீய சக்திகள்தானே விடை கொள்ளும். பிறகு, ஆன்ம சக்தி எழும். ஆன்ம சக்தியின் முதிர்ச்சியே இறைவன். அவனருள் கூடுவது பிறகு எளிதாகி நோக்கும் பக்கமெல்லாம் அவனருட் பொலிவுதான் தோன்றும், இந்த நிலை வாய்க்கப் பெற்ற சமூகம் நிமைப் பாதையில் செல்லாது என்பது,பெரியவர்களின் துணிபு.

சாதியால் செல்வத்தால் உயர்ந்தோரில்லை. உள்ளன்பு வைத்தவரே உயர்ந்தவர். அகத்தே ஒளிரும் அன்பு எனும் மணிவிளக்கை, குலம் எனும் சூறுவளி அணைக்காது என்று அறிந்த கம்பர் பெருமான் சிந்தித்துத் தெளிந்து சூறுவளியால் மணிவிளக்குக்கு ஆபத்து இல்லை என்று விளக்க, அன்பின் பெருமையையும், இராமனது உயரிய தன்மையையும் தனது காவியத்தில் அமைத்துக் காட்டும் தன்மையைக் காண்போம்.

அரசர் பெருமானுன: இராமபிரானை அற்றம் நீத்த மனத் தினனுய் நெஞ்சில் நிறைந்த அன்புடன் இருக்கும் வேடர் தலைவனுன குகன்,'கங்கைக்கரையிலே காணவருகின்றுன். இராமனையும் கண்டான். தன் வணக்கத்தைச் செய்து, தான் காணிக்கைப் பொருளாக உடன் கொண்டு வந்த தேனையும், மீனையும் அயோத்தியர் கோன் திருவடிகளிலே வைத்து நின்றுன். காணிக்கைப் பொருள்களைக் கண்ணுற்ற இராமன், ''என்மேலிருக்கும் அன்புப் பெருக்கத்தால் தவசிகள் வசிக்கும் பரிசுத்தமான இடத்திற்கு இவனைக் கொண்டு வரலாமா என்பதையும் தெளியாமல், 'அமுது செய்து அருள்க' என்கிறுனே! என்னே

இவன் அன்பு நிலை!'' என்று எண்ணி, உவப்புடன் குகனைப் பார்த்து,

''அன்ப! அன்பின் முதிர்ந்த நிலையில், மனவுவப்போடு நீ கொண்டு வந்த பொருள்கள் மிகவும் சிறந்தது. அமிழ்தினும் சீர்மையுற்றது இனிதினும் இனிது. ஆதலால் பொருளின் தன்மையை ஆராயாது, நின் அன்பின் பெருமையைத் தெரிந்து இவைகளை நான் அங்கீகரித்தேன். இவைகள் என்றால் உட்கொண்டதற்குச் சமானம் ஆயின'' என்று கூறினான்.

பிறகு இராமன், 'நாளைக் கங்கையைக் கடந்து கானகம் செல்ல வேண்டும். நாவாயுடன் வருக. இன்று நின் சுற்றத் தாரோடு, இருப்பிடம் சேர்வாய்' என்றான்.

இவ்வுரைகளைக் கேட்ட குகன், ஆற்றாது, அழுத கண்ணீர் சோர ''அண்ணலே! பீதாம்பரமும், துங்க மாமணி முடியும் புனைந்த கோலத்துடன், உன்னை நான் காண வேண்டியிருக்க, சடைமுடியும் மரவுரியும் அணிந்த கோலத்தில் காண்கிறேன். இப்படிக் காண நேர்ந்த கண்களைப் பிடுங்கி எறிவேனாயின், நான் உன்னிடம் கொண்டிருக்கும் அன்பு உண்மையானதாகும் அப்படியும் நான் செய்யவில்லை. இந்நிலையில் உன்னை விட்டு பிரிந்து சென்று விட்டால் என் அன்பு வெளிப் பகட்டுத் தான். உன்னை விட்டு நான் பிரியேன். உனக்கே ஆட்செய்து கொண்டிருப்பேன். ஏற்று அருள்'' என்றான்.

இராமனைப் பிரிய குகனுக்கு மனது இடந்தர வில்லை. அன்புடை அண்ணலைத் தன்னுடனே இருந்து தன் குற்றேவல்களை ஏற்றுக் கொள்ளுமாறு மன்றாடிக் கேட்டு, தன் அன்பின் பெருக்கத்தால், இராமன் அரசர் பெருமான் என்பதையும் மறந்து அவனைத் தன்னினத்தவனாக எண்ணி,

''தேனுள் திளையுண்டாம் தேவரும் நுகர்தற்கா
மூனுள துணைநாயே முயிருள விளையாடக்

காஞுள புனலாடக் கங்கையுமுளதன்ரு
நாஞுளதனையும் நீயினி திருநடவெம்பால்

இத்தகைய சௌகரியங்கள் இருக்கின்றன. இன்பமுடன் இனிதிருந்து காலங் கடத்தலாமே!'' என்கிருன்.

இவ்வாறு உரிமை கொண்டாடியதைக் கம்பர் நயமுற விளக்குகிருர். திருவரங்கம் பாசுரத்தில் மங்கை மன்னனும்,

ஏழையேதலன் கீழ்மகன் என்ஞது இரங்கி மற்றவற்கு இன்னருள் சுரந்து
மாழைமான் மடநோக்கி உன்தோழி உம்பி எம்பி யென்ெருழிந்திலே; உகந்து
தோழன் நீ எனக்கு இங்கொழியென்ற சொற்கள்வந்து அடியேன் மனத்திருந்திட
ஆழிவண்ண! நின் அடியிணை அடைந்தேன் அணிபொழில் திருவரங்கத்து அம்மானே!''

என்று அந்த அன்பின் முதிர்ச்சியைத் தம் செஞ் சொற்களால் பாடியிருப்பது நினைவு கொள்ளத் தக்கது.

தந்தையின் சொல்லை நிறைவேற்றுவதன் முக்கியத்தை எடுத்துச் சொல்லி, குகனை சமாதானப்படுத்தி, நாவாயில் ஏறி நெடு நீர் கங்கையைக் கடிதினிற் கடந்து தென்கரை சேர்கிருன். பிரிகின்ற இராமனைப் பார்த்து வருந்திக் கண்ணீர் அருவிசோரக் கலங்கி அழுது கரையில் ''ஐய, உன்னை விட்டு பிரிய மனம் வரவில்லை. உன்னைவிட்டு பிரிவது எங்ஙனம்? உனக்கு பணிவிடைகள் யாவும் செய்வேன்; என்னை பிரிந்து செல்லாதே'' என்று கதறுகிருன்.

அப்போது குகனின் அன்பால் கட்டுண்ட இராமனது உள்ளத்தில் ஆழ்ந்து கிடந்த அன்பெனும் அறப்பெரும் சலதி பொங்கி வழிந்தது. கன்றினைப் பிரிந்து ஆவெனக் கலங்கி "அன்பனே! நீ வேறு நான் என நினையாதே. நான் உன் உயிர் போல் உள்ளவன். நீ என்னுயிர் போல் உள்ளவன். என் இளையான் உனக்கு இளையானே. சீதை உன் தோழியாவாள்" என்று கூறியதோடல்லாமல், "நளிர் கடல் உலகமெல்லாம் உன்னுடையது. நான் உன் தொழில் உரிமையில் உள்ளேன்" என்று கூறுகிறான். என்னே இவர்களது அன்பின் நிலை !!

"வெயிலில் அடிபட்டார்க்கே நிழல் அருமை தெரிவது போல நாமிருவரும் பிரிந்து அதனால் ஏற்படும் பிரிவுத் துன்பத்தை அனுபவித்தால்தான் நாம் பின்னர் கூடும்போது இன்னும் அதிக இன்பம் பயக்கும். இப்பிரிவைக் குறித்து வருந்தாதே. உன்னுடன் தோழமை கொள்ளும் முன்பு, நாங்கள் உடன்பிறந்தவர்கள் நால்வராக இருந்தோம். இப்போது எல்லை காணு அன்பு உடைய உன்னையும் சேர்த்து ஐவரானோம்" என்றான். இராமனின் உயரிய அன்பின் ஆட்சியால் ஒரு வேடுவன், சக்ரவர்த்தித் திருமகனாரின் சகோதரனாகி விட்டான். இவர்களின் தூய அன்பிற்கு சாதியும், ஒரு பொருட்டாக நிற்க முடியவில்லை. இங்கு அன்பே வென்றது.

சகோதர பாவத்தின் ஜீவநாடி அன்புதான். இது தற்சமயம் மறந்துவிட்ட நிலையில் சிலர் வாழ்கின்றார்கள். இவ்வாழ்வு தாழ்வாகவே முடியும். சீர்பெற்று வாழ விரும்பினால் அன்பை அடிப்படையாகக் கொள்ளுவதுதான் முறை.

அன்புக்குச் சாதிப் பற்று ஏற்பட்டுவிட்டால் ஒரு வகுப்பு மனிதன்தான் நிலைப்பான். மற்ற உயிரினமே இருக்க வழி

யில்லை. கோடானகோடி பகைகள் இருப்பினும் மறந்து அன்புடன் பழகி வருவதால்தான் உலகு நிலைத்திருக்கிறது. மனிதன் வாழ விரும்பினால் அன்புதான் துணை!

ஸ்வாமி எம்பெருமானாரும் தான் மட்டும் உய்ய வழி தேடிக்கொண்டு பிறர் எப்படிப் போனால் என்ன? என்று எண்ணாமல் அடியார் குழாங்களும் இறைவனிடம் அன்பு செலுத்தி உய்யவேண்டும் என்பதால்தானே திருமந்த்ரார்த்தத்தை பல்லோர் அறியப் பகர்ந்து உஜ்ஜீவிக்கும்படி செய்தார்! அது அவர் அன்பு நிலையல்லவா? அன்பின் அடிப்படையில் எம்பெருமான் அடியார்களைக் கோஷ்டி சேர்த்த பெருமை உடையவர் ஒருவருக்கே உரியதன்றோ ! !

—o—

## "இன்னுமொரு நூற்றாண்டிரும்"

**ஸௌப்யன்**

வாதியரும் மண்டியிட மற்றெவரும் சார்ந்துய்யப்
பூதலூர் வந்துதித்த புண்ணியரே—மேதினியர்
இன்னும் மருள்நீங்கி மால்போற்றி ஈடேற
இன்னுமொரு நூற்றாண் டிரும்.

# அன்புள்ள கீதாசார்யரே!

**நெல்லை கோவிந்தன்** நெல்லை-3

பங்குனி இதழை ஸ்வாமியின் சிறப்பு மலராக வெளியிட்டது தாங்கள் இத்தரணிக்குச் செய்துள்ள பெரும் கைங்கர்யமாகும். ஸ்வாமியின் சிஷ்யனை அடியேன் போன்றோர்களுக்கு ஸ்வாமியைப் பற்றி அவருடன் நேருக்குநேர் உரையாடி அரிய பெரிய அமுதங்களை வாரி வழங்கியிருப்பது மிகவும் அருமை.

**ஆத்ரேயன்** திருப்பதி

பங்குனி இதழ் பக்கம் 13ல் பேட்டி கேள்வியில் "ஸ்ரீ வைஷ்ணவ .....பங்கு எவ்வளவு?" இந்தக் கேள்வி பதில் இல்லாமலே இருந்திருக்கலாம். கீதாசார்யன் இது மாதிரி சர்ச்சைகளில் ஈடுபடாமலிருப்பது நலம். இதை நான் முழுக்க முழுக்க எதிர்க்கிறேன்.

**கே. இ. வே கிருஷ்ணன்** காஞ்சிபுரம்-2

சென்ற இதழ் பேட்டி மிகவும் அருமையாக இருந்தது. ஒலிப்பதிவு செய்யப்பட்ட அப்பேட்டியை வானொலியில் ஒலிபரப்பு செய்ய ஏற்பாடு செய்யலாம். ஸ்தலசயனத் துறைவார் கட்டுரை மிகவும் நன்றாக இருந்தது.

**A. V. S ஐயங்கார்** பாளையங்கோட்டை

**P. B. A.** ஸ்வாமியைப்பற்றி சாண்டில்யன் எழுதியுள்ள கட்டுரையைப் புகழ வார்த்தைகளே கிடையாது. அவருடைய திறனுக்குப் பாராட்டுக்கள்

**பாபு** சென்னை-1

கீதாசார்யன் முற்றிலும் புதிய பாணியில் பொலிவுடன் பவனிவருகிறான். பங்குனி இதழ் அட்டை **Superb.** பேட்டிகள் தொடருமா?

## '' சந்தேகத்திற்கான விளக்கம் ''

### ஆத்தான் ரங்காசாரியார்

மாசி மாத இதழில் பிரசுரமான "கோசல நாடுடை வள்ளல்" என்ற கட்டுரையில் தமக்குச் சிறிது சந்தேகம் இருப்பதாகத் திரு. வரதராஜன் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். சந்தேகத்தைத் தெளிவுபடுத்த வேண்டியது கடமைதான்.

திரு. வரதராஜன் அவர்கள் மேற்படி கட்டுரையை இன்னும் சில தடவைகள் ஊன்றிப் படித்திருந்தால் சந்தேகம் தோன்றியிருக்காது. இராமனைக் 'கோசலை நாடுடை வள்ளல்' என்ற அடை மொழியால் கம்பர் குறிப்பிடுகிறார். கவியின் உள்ளப்பாங்கைப் படிப்போர் பலவாறு அனுமானிக்க முடியும். பலவாறு பொருள் கொள்ளவும் முடியும். இதை மறுக்கும் உரிமை எவருக்கும் இல்லை. இராவணனது அவல நிலைக்கு வருந்திய இராமன் "இன்றுபோய் நாளைவா" என்றான். இப்பாடலின் பொருளை ஆழமாகச் சிந்தித்துப் பார்ப்பது அறிவுடைமை. விபீஷணனுக்கு அடைக்கலம் கொடுக்கையில் "தாழ்கடல் இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன்" என்று வாக்குறுதியளித்தவன் இராமன். அதையும் காப்பாற்றியாக வேண்டும்.

ஒருகால் இராவணன் மனம் திருந்திப் பிராட்டியை இராமனிடம் ஒப்படைத்து நல்லவனாக இருந்துவிட்டால் (conditioned class) இராவணனுக்கு இலங்கை அரசு தங்கியிருக்கும் என்பது அனுமானமே. இராமன் இராவணனிடம் "நாடு தருகிறேன்" என்று சொல்லவும் இல்லை. அப்படிச் சொன்னதாக என் கட்டுரையில் குறிப்பிடவும் இல்லை. ஒரு பாடலுக்கு இப்படியெல்லாம் உட்பொருள் இருக்கலாம் என்று அனுமானித்து விளக்கம் காண்பதும் இலக்கிய மரபு.

'செய்யுளின் நலம் பாராட்டல்' என்று வேண்டுமானாலும் இதைக் கொள்ளலாம். திரு வரதராஜன் அவர்கள் குறிப்பிட்டுள்ள 'சிறையில் வைத்தவள்...என்ற செய்யுளின் மூன்றும் அடியில் "ஏவல் செய்து இருந்தியேல் இன்னும் தரையில் வைக்கிலென் நின் தலை வாளியின் தடிந்து" என்கிறான் இராமன். ஒருவேளை இராவணன் மனம் மாறி நல்லவனாக நடந்திருந்தால் இராமன் என்ன செய்திருப்பான்? இராவணனை வீழ்த்தியிருப்பானா? மாட்டான்—மன்னித்திருப்பான். இராமனது கருணைவெற்று வெள்ளமாக ஓட இராவணன் வாய்ப்பளிக்கவில்லை

திரு. வரதராஜன் அவர்களுக்கு வீணான சந்தேகம் ஏற்பட வழியில்லை. நிறைந்த மனதுடன் "இன்றவிந்தது போலும்...... என்ற பாடல் முதல் 'வள்ளல்' என முடியும் பாடல் வரை ஊன்றிப் பார்க்கட்டும்—தெளிவு பிறக்கும்.



# அருளிச் செயல் அன்பர் அவை

சென்ற இரு இதழ்களில் நமது அவையைப்பற்றி வெளியிட்டிருந்ததைக் கண்ணுற்ற பல அன்பர்கள் பற்பல திவ்ய தேசங்களிலிருந்தும் தத்தமது திவ்ய தேசங்களுக்கு உத்ஸவ காலங்களில் விஜயம் செய்யுமாறு கடிதங்கள் எழுதிய வண்ணமிருக்கிறார்கள். அவர்கள் அறிந்து கொள்வதற்காக, இந்த அவையினைப் பற்றிய மேலும் சில விவரங்களை அறிவிக்கிறோம்.

'அருளிச்செயல் அன்பர் அவை' என்ற இந்த அவையில் திவ்யப்ரபந்தம் வல்லவர்களான 50 சிறுவர்களும் பல இளைஞர்களும் பெரியோர்களும் உள்ளனர். இந்த அவையானது திவ்ய தேசங்களிலும், ஆழ்வார் ஆசார்யர்களின் அவதார ஸ்தலங்களிலும் அருளிச் செயல் கைங்கர்யங்களில் ஈடுபட்டு வருகிறது. ஆயினும் இவ்வவையில் அங்கம் வகிப்பவர்கள் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயில்பவர்களாயும், உத்யோகங்களில் இருப்பவர்களாயுமிருப்பதால் விடுமுறை தினங்களில் மட்டுமே மேற்படி கைங்கரியத்தைச் செய்ய முடியும்.

ஆதலால் இதனைக் கண்ணுறும் அன்பர்கள் தத்தமது திவ்ய தேசங்களில் அடியோங்களது அவை கலந்து கொள்ள விரும்பினால் — கலந்து கொள்ள வேண்டிய குறிப்பிட்ட நாளைத் தெளிவாகக் குறிப்பிட்டு முன்னதாகவே தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: M. A. வேங்கடகிருஷ்ணன், 7, தெற்கு மாடவீதி, திருவல்லிக்கேணி, சென்னை-600 005.

P. B. அநந்தாசாரியர் (அட்வகேட்)
தலைவர்

# குணந்திகழ் கொண்டல்

இராமாநுச நூற்றந்தாதியில் உணர்ந்த மெய்ஞ்ஞானியர் யோகந்தொறும் என்கிற பாட்டின் ஈற்றடி "குணந்திகழ் கொண்டலிராமாநுசனெங் குலக் கொழுந்தே" என்றுள்ளது. இதனால் ஸ்வாமி ஒரு மேகமாகக் கூறப்பட்டுள்ளார். மேகத்திற்கும் ஸ்வாமிக்குமுள்ள உவமைப் பொருத்தங்கள் சில நிரூபிக்கப்படுகின்றன இங்கு.

மேகமானது கடல் நீரைப் பருகியெழுந்து பொழிகின்றதென்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. எம்பெருமானாராகிற மேகம் * நிர்மத்த்ய ச்ருதிஸாகராத் * என்கிற ப்ரமாணத்தில் ஸாகரமாகச் சொல்லப்பட்ட வடமொழி வேதத்தையும்,

**P. B. அண்ணங்கராசாரியர்**

*நமாம்ருயம் த்ராவிட வேதஸாகரம் *என்கிற ப்ரமாணத்தில் ஸாகரமாகச் சொல்லப்பட்ட தென்மொழி வேதத்தையும் அவகாஹித்து அவ்வுபய வேதார்த்தங்களாகிற தீர்த்தங்களைப் பொழிவர்.

காளமேகமானது, *கண்ணன்பால் நன்னிறங் கொள் கார்* என்கிற பெரிய திருவந்தாதிப் பாசுரப்படி திருமாலின் திருமேனியோடொத்த நிறத்தையுடைத்தாயிருக்கும்; ஆதிசேஷாவதார பூதரான ஸ்வாமியின் திருமேனி பால் போன்றதாயிருக்கச் செய்தேயும் * அபி பணிபதிபாவாத் சுப்ரம் அந்தச் சயாவோர் மரதகஸ் "குமாரை: ரங்கபர்த்துர் மயூகை:, ஸகலஜலதிபாந ச்யாமஜீமூதஜைத்ரம் புலகயதி விமாநம்* (ஸ்ரீரங்கராஜஸ்தவே) என்று பட்டர் அருளிச் செய்தபடி

கார்முகில் வண்ணனை கண்ணனை இடைவிடின்றி உள்ளே கொண்டிருக்கையாலே அந்தக் கரிய திருமேனியின் நிழ லீட்டாலே (எம்பெருமானுருடைய திருமேனியும்) கார்முகில் வண்ணமாகவே காணப்படுமென்றுணர்க.

மேகமானது ஸகல தேசங்களிலுமுள்ள ஸகல பிராணி களையும் ரக்ஷிக்கக் கடமைப்பட்டதாகையாலே ஆகாசப்பரப் பெங்கும் ஸஞ்சரிக்கும். ஸ்வாமி தாமும் ஸகல தேசங்களிலு முள்ள ஸகலர்த்மாக்களையும் ஸம்ரக்ஷிக்க வேண்டி, * ஸ்ரீ ரங்கம் கரிசைலமஞ்ஜநகிரிம் தார்க்ஷ்யாத்ரி ஸிம்ஹாசலௌ ஸ்ரீ கூர்மம் புருஷோத்தமஞ்ச பதரீநாராயணம் நைமிசம், ஸ்ரீமத் த்வாரவதி ப்ரயாக மதுரா யோத்யா கயா புஷ்கரம் ஸாலக்ராமகிரிம் நிஷேவ்யரமதே ராமாநுஜோயம் முநி: * என்கிறபடியே தென்னாட்டிலும் வட நாட்டிலுமுள்ள ஸகல திவ்ய க்ஷேத்ரங்களிலும் ஸஞ்சரித்து ஸ்ரீஸூக்தி அம்ருதவர்ஷங் களினால் ஸகலப்ராணிகளையும் செழித்தோங்கி வளரச் செய் தருளினார்.

கடலிலுள்ள நீரானது நம்மால் நேராகக் கொள்ளப்படு மாயின் உப்பு ஜலமாகையாலே ஒன்றுக்குமுவாததாயிருக்கும்; அதுதானே மேகம் வாயிலாக வருமாயின் பரம போக்யமா யிருக்கும். ஆகவே, மேகமானது அபோக்யமான நீரையும் பரம போக்யமாக்கித்தருமது என்பது தேறிற்று. அதுபோல சாஸ்த்ரங்களாகிற கடல்களிலுள்ள அர்த்தங்களை (வேதார்த் தங்களை) நாம் நேராகக் கொள்ளப் பார்த்தோமானால் அவை நமக்கு இனிமையாயிருக்கமாட்டா; அவற்றையே நாம் வேதார்த்த ஸங்க்ரஹம் ஸ்ரீபாஷ்யம் முதலிய ஸ்வாமியின் ஸ்ரீஸூக்தி வாயிலாகக் கொள்வோமாயின் அவை பரம போக்யமாயிருக்கும்படியைக் காணுநின்றோம். ஆகவே உப்பு நீர் போன்ற சாஸ்த்ரார்த்தங்களை பரம மதுரமாக்கியளிக்கும் விலக்ஷண மேகம் நம் ஸ்வாமி என்றதாயிற்று.

மேகமானது ஒருவருடையவோ சிலருடையவோ வேண்டுகோளினாலல்லாமல் இயல்பாகவே உலகுக்கு உதவி செய்யுமது. அதுபோல எம்பெருமானார் அநுவ்ருத்திப்ரஸந்நாசார்யர்களெனப் பட்ட மற்ற ,ஆசாரியர்களைப் போலல்லாமல் க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யரென்று அஸாதாரணமான விருதைப் பெற்றவராய், ஒராண் வழியாயுபதேசித்தார் முன்னோர், எராரெதிராசரின்னருளால் — பாருலகில் ஆசையுடையோர்க்கெல்லாமாரியர்காள் கூறுமென்று பேசி வரம்பறுத்தார் பின் (உபதேசரத்தின மாலை) என்று மணவாள மாமுனிகளருளிச் செய்யும்படியாக அபேக்ஷாநிரபேக்ஷமாகவே ஸம்ஸாரி சேதநஸமுஜ்ஜீவனத்தில் ஊற்றமுடையவர் என்பது உணரத்தக்கது.

மேகமானது கடலின் நீரைப் பருகிக் கொண்டு அந்தக் கடல் தன்னிலும் பெய்யும் படியைக் காண்கிறோம். 'நாம் கொண்டவிடத்தில் எதற்காகப் பெய்ய வேணு' மென்றிராமல் கொண்டவிடத்திலும் பெய்யுமது மேகம் என்றதாயிற்று. எம்பெருமானாருமப்படியே ; ஸ்வாமி தாம் திருமாலையாண்டானிடத்தில் திருவாய்மொழிக்குப் பொருள் கேட்டு வந்தாரென்பது பிரஸித்தம். கொண்டவிடமாகிய அந்தவிடத்திலும் இந்த மேகம் பெய்தது. அதாவது, பல திருவாய்மொழிப் பாசுரங்களுக்கு அரிய பெரிய அழகிய பொருளை ஸ்வாமி தாம் திருமாலையாண்டானுக்கே எடுத்துரைக்கும் படியானமை.

வயல்களுக்கு நதியிலிருந்தும் ஏரிகளிலிருந்தும் எவ்வளவு நீர் பெருகினாலும் "பைங்கூழ்கள் மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்" என்று குலசேகராழ்வாரருளிச் செய்தபடி மேகம் பெய்யாவிடில் பயிர் செழிப்புறாது ; மழை பெய்தாலல்லது லோகக்ஷேமம் நன்கு அமையாது. அதுபோல ச்ருதி, ஸ்ம்ருதி, இதிஹாஸ புராணங்களும் ஆழ்வாரருளிச் செயல்களும் ஸ்ரீமந் நாதமுனிகள் ஆளவந்தார் போன்ற ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளுமிருந்தாலும் *எம்பெருமானார் ஸ்ரீஸூக்

திகளினுலேயே உலகம் க்ஷேமமடைந்துள்ளது. * எம்பெருமானுர் தரிசனமென்றே யிதற்கு, நம் பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார். அம்புவியோர் இந்தத் தரிசனத்தை யெம் பெருமானுர் வளர்த்த, அந்தச்செயலறிகைக்கா *

"மாமுத்த நிதி சொரியும் மாமுகில்காள்" என்று ஆண்டாளருளிச் செய்தபடியே மேகம் முத்துக்களையும் நவ நிதிகளையும் வர்ஷிக்கும். ஸ்வாமியும் முத்துப் போன்ற ஸ்ரீஸூக்திகளை நவநிதிகளென்னும்படி அநுக்ரஹித்தருளினர். நிதிகள் ஒன்பதாயிருப்பது போல ஸ்வாமி ஸாதித்த திவ்ய க்ரந்தங்களும் ஒன்பதே; ஸ்ரீ பாஷ்யம், வேதாந்த தீபம் வேதாந்த ஸாரம், கீதாபாஷ்யம், வேதார்த்தஸங்க்ரஹம், சரணுகதிகத்யம், ஸ்ரீ ரங்ககத்யம், ஸ்ரீ வைகுண்ட கத்யம், நித்யம் — என்று.

மேகம் வர்ஷிப்பதனல் உலகங்கட்கு நன்மையாவது போலவே பல பொருள்களுக்குத் தீமையுண்டாவது முண்டு; ஆண்டாளும் நாச்சியார் திருமொழியில் * நீர் காலத்து எருக்கிலம்பழவிலைபோல் வீழ்வேனை * என்றருளிச் செய்தாள். எருக்கஞ்செடி முதலானவை மழையினுல் அழிந்தொழியும் படியைக் காணுநின்ருேம்; அப்படியே எம்பெருமானுராகிற மேகத்தின் ஸ்ரீஸூக்திவர்ஷங்களினுல் "நாரணனைக் காட்டிய வேதம் களிப்புற்றது. தென்குருகை வள்ளல் வாட்டமிலா வண்டமிழ் மறை வாழ்ந்தது" என்று பேசும்படியான வாழ்ச்சியைப் போலவே, "நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன" என்றும், "தற்கச் சமணரும் சாக்கியப் பேய்களும் தாழ் சடையோன் சொற்கற்ற சோம்பரும் சூனிய வாதரும், நான்மறையும் நிற்கக் குறும்பு செய் நீசரும் மாண்டனர்" என்றும், "சாருவாகமதநீறு செய்து சமணச் செடிக் கனல் கொளுத்திய" என்றும் பேசும்படியாகப் பல புறச் சமயிகள் அழிவையும் காணு நின்ருேமே. இங்ஙனமே மற்றும் பல உவமைப் பொருத்தங்களும் உய்த்துணர்க. ★

# தேவு மற்றறியேன்—6

ச்ரிய : பதியான எம்பெருமானுக்கு **அநிர்விண்ண :** என்று ஒரு திருநாமம் ஸ்ரீஸஹஸ்ரநாமத்தில் சொல்லப்படுகிறது. "சோம்பாமல் இப்பல்லுருவையெல்லாம் படர்வித்த வித்தா" என்று ஆழ்வார் கொண்டாடுகிறபடியே, உலகங்களைப் படைத்து, பலவித சரீரங்களுடன் பலஜீவன்களைப் படைத்து வாழ்விக்கச் செய்வதில் ஊக்கம் கொண்டவன் என்று இத்திருநாமத்துக்குப் பொருள். கை, கால், கண் முதலிய அவயவங்களையும் செய்யக் கூடியவை கூடாதவை எவை என்ற பகுத்தறிவையும் தந்து, "மாறி மாறி பல பிறப்பும் பிறந்து" என்கிறபடியே இந்த ஸம்ஸாரமாகிற சுழலில் சிக்கிச்சுழலாமல் அவனைப் புகலாகப் பற்றி இந்தச் சுழலினின்றும் மீண்டு அவனை அடைந்து அவன் திருவடிகளில்

**Dr. V. V. ராமானுஜம்**

நித்யகைங்கர்யம் பண்ணிக்கொண்டு வாழ்வதாகிற பேற்றை நாம் பெற்று வாழ வேண்டுமென்பதே அவன் நோக்கு. நம்மில் மிகப் பலர் இவ்வுலக இன்பங்களை நுகர்ந்து அதிலேயே மேல்மேலும் ஆசையுடையவர்களாய், இவ்வுலக வாழ்க்கை மின்னலைப் போல் நிலையற்றது என்று உணராமல் இவ்வாழ்விலேயே ஊக்கம் கொண்டுள்ளோம். ஏதோ மிகச் சிலர் சரீரம் வேறு, ஆத்மாவேறு என்னும் உண்மையை உள்ளபடி உணர்ந்து, சரீரத்தின் நிலையின்மையையும் உணர்ந்து மேல் மேலும் வரும் ஜன்மபரம்பரைகளினின்றும் மீளவேணும் என்று உள்ளுர உணர்வது அவனுடைய அருளினால்தான். இந்த அருளின் கார்யமாகவே நமக்கு ஸதாசார்ய ஸம்பந்தத்தை ஏற்படுத்தியருளுகிறான் எம்பெருமான்.

ஆசார்யனைப் பற்றி "அவனே தெய்வம்; தேவு மற்றறியேன்" என்ற ஒழுக்கத்தில் நிற்கை சரமபர்வ நிஷ்டை எனப்படுகிறது. பேற்றுக்கு இதற்கு அவ்வருகான வழி ஏதுமில்லை என்பதால், நமது பூர்வர்கள் இந்த அர்த்தத்தை நெஞ்சில் கொண்டு எப்படி நிலைந்திருந்தார்கள் என்பதை அவர்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் (அநுஷ்டானத்தை) கொண்டு சில கட்டுரைகள் மூலமாக விளக்கியுள்ளேன். கலி முற்றியுள்ள இந்த இருபதாம் நூற்றாண்டின் கடைசி ஆண்டு களில் இவ்வர்த்தங்கள் நெஞ்சில் ஊறுவது துர்லபம். யாரோ சிலருக்கு ருசித்து இனிக்கலாம். வேதார்த்தஸங்க்ரஹத்தின் இறுதியில் எம்பெருமானார்

ஸாராஸாரவிவேகஜ்ஞா : கரீயாம்ஸோ விமத்ஸரா :
ப்ரமாணதந்த்ரா : ஸந்தீதி க்ருதோ வேதார்த்த
ஸங்க்ரஹ : ||

என்றருளிச் செய்துள்ளார் "இது பற்ற வேண்டியது (ஸாரம்) : இது விடவேண்டியது (அஸாரம்) என்று விவேகித் தறியக் கூடியவரும், த்வேஷமற்ற—தூயமனது படைத்தவரும் சாஸ்த்ரங்களாகிற ப்ரமாணங்களுக்குக் கட்டுப்பட்டவருமான மஹான்கள் உளர் என்று இந்த வேதார்த்தஸங்க்ரஹம் செய்யப்பட்டது" என்பது இதன் பொருள்.

சாஸ்த்ரங்களுக்குக் கட்டுப்பட்டவர் உள்ளனர் என்ற நம்பிக்கையில் இந்த க்ரந்தம் செய்யப்பட்டது என்று நல்லடிக் காலமான எம்பெருமானார் காலத்தில் சொல்ல வேணுமானால் இந்தக் காலத்தில் என் சொல்வது ? அதுவும் பகவத் விஷயத் தின் பெருமையை ஓரளவுக்கு ஒப்புக்கொள்வர் ஸாமான்ய ஜனங்கள். பாகவதர் பெருமை அதினும் சிறந்தது என்ற அர்த்தம் ருசிப்பது மிகவும் துர்லபம்.

பூர்வஜன்ம புண்யமும் எம்பெருமானாரநுக்ரஹமும் அதன் மூலம், பகவதநுக்ரஹமும் பெற்ற மஹாபாக்யசாலி

களுக்கு இவ்வர்த்தங்களின் சீர்மை நெஞ்சில் படும். ஆசாரியன் பெருமையை உள்ளபடி அறிந்துள்ள பகவான் தானும் ஆசாரியனாக இருக்க ஆசைப்பட்டு கீதையை உபதேசித்து **கீதாசார்யன்** ஆனான். ஆனால் அவனுக்குக் கிடைத்த சிஷ்யன் மதுரகவிகள் போல் தேவுமற்றறியேன் என்று இருக்கவில்லை. நம்மாழ்வாருக்கு ஒரு மதுரகவியும் எம்பெருமானாருக்கு ஒரு வடுக நம்பியும் வாய்த்தது அவர்கள் சீர்மையைக் காட்டும். இவர்கள் காட்டித்தராவிடில் கீதையிலுள்ள செம்மைப் பொருள்களையும் கீதாசார்யனின் பெருமையையும் நாம் உணரப்போவதில்லை.

முமுக்ஷுப்படி என்னும் நூலில் லோகாசார்யர் அருளிச் செய்வது : "ஸர்வேச்வரன் தன் க்ருபையாலே இவர்கள் (ஜீவர்கள்) தன்னையறிந்து கரைமரஞ்சேரும்படி, தானே சிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று திருமந்த்ரத்தை வெளியிட்டருளினான். சிஷ்யனாய் நின்றது சிஷ்யனிருக்குமிருப்பு நாட்டார் அறியாமையாலே அத்தை அறிவிக்கைக்காக." இந்த ஸூத்ரம் எம்பெருமான் பத்ரி நாராயணனாய் திருமந்த்ரத்தை நரனுக்கு (நரனும் நாராயணாவதாரமே) உபதேசித்தைச் சொல்லும். அங்கு சிஷ்யனிருக்குமிருப்பை பகவான் காட்டியது ஒருபுறமிருக்கட்டும். இங்கு (தென்னாட்டில்) திவ்ய தேசங்களில் காட்டிய பாங்கைச் சுருக்கமாக அநுபவிப்போம்

நமது ஸத்ஸம்ப்ரதாயத்தில் ஆசார்த்வபூர்த்தி ஒரே ஒரு வ்யக்திக்குத்தான் ஒத்துக் கொள்ளப்பட்டுள்ளது அவர் மாறனடி பணிந்துய்ந்த நம்மிராமாநுசனே. ராமாநுசன் என்றால் ராமாநுசனின் அபராவதாரமான மணவாளமாமுனிகளையும் கொள்ள வேண்டும். இவர்களிருவரிடமும் எம்பெருமான் சிஷ்யனாயிருந்து பெருமையுற்றதை அநுபவிப்போம். திவ்யதேசமங்களாசாஸன அடைவில் தென்பாண்டிய நாட்டில் வைஷ்ணவ வாமன க்ஷேத்ரமான திருக்குறுங்குடிக்கு

எம்பெருமானுர் எழுந்தருளியபோது, திருக்குறுங்குடிப் பேரருளாளன், தனக்கு ஆசார்யஸம்பந்தம் வேணும் என்று ஆசைப்பட்டு, ஸ்வாமி எழுந்தருளியவாறே அவரிடம், "நாம் பலபிறப்பும் பிறந்து ஆசார்யனுய் நின்று திருமந்த்ரத்தை வெளியிட்டும், அபயப்ரதானத்தை அளித்தும், ஸ்ரீ கீதையைப் பிறப்பித்தும் நாட்டாரைத் திருத்தப் பார்த்தும் இயலவில்லை. ஆழ்வார் "பொலிக! பொலிக!" வில் காட்டியபடி தேவரீர் நாடடங்க ஸ்ரீ வைஷ்ணவர்களாக ஆக்கிப் பணி கொண்டது எங்ஙனம்?" என்று வினவ, உடையவரும் "கேட்குமளவில் கேட்க வேணும்" என்று விண்ணப்பிக்க, பெருமாளும் தமது திவ்யஸிம்ஹாஸனத்தை உடையவருக்களித்துத் தான் கீழே நின்று கேட்க, உடையவரும் தமதாசார்யரான பெரிய நம்பி ஆஸனத்தில் வீற்றிருப்பதாக மனதில் கொண்டு, தாம் நின்று கொண்டு, பெருமாள் திருச்செவியில் த்வயத்தை உபதேசித்தருளினர். பெருமாளும்," நாம் நம்பிராமாநுசனையுடையோமாய் ஆசார்யவான் ஆனேம்" என்று மகிழ்ந்து உடையவரால் **ஸ்ரீவைஷ்ணவ நம்பி** என்று திரு நாமம் இடப் பெற்று க்ருதார்த்தரானுர்.

எம்பெருமானுரும் நம்பியிடம் விடைபெற்று திருவநந்தபுரம் சென்று அங்குள்ளாரைத் திருத்திப்பணி கொண்டு பத்மநாபனைத் தொழுது கொண்டு சிலநாளிருக்க, அங்குள்ள அர்ச்சக நம்பிகள் திருவரங்கன் செல்வம் முற்றும் திருத்தி வைத்த புகழ் கண்டு அஞ்சி, இந்த ஸன்னிதியையும் தம் கட்டு திட்டங்களுக்கு உட்படுத்தலாம் என்ற பயத்தால் பெருமாளை வேண்ட, அவரும் அவர்களிடமுள்ள பக்ஷபாதத்தினல் பெரிய திருவடியை நியமித்து உடையவர் ஓரிரவில் தூங்கும்போது அப்படியே கொண்டு திருக்குறுங்குடியில் விட்டு விடும்படி செய்தார்.

விடிந்தவாறே கண்விழித்த உடையவர் தாம் திருக்குறுங்குடியிலிருக்கக் கண்டு, "என்ன மாயம் கொல்!" என்று

வியந்து, நம்பி ! என்று வடுக நம்பியை அழைக்க, தன்னுரிய னுக்குத் தாளடிமை செய்ய இதுவே தருணம் என்று கண்ட குறுங்குடி நம்பி, தாமே வடுக நம்பியாய் வந்து நின்று உடைய வருக்குக் குற்றேவல்களைப் புரிந்து நின்றார். உடையவரும் அடைவில் நீராடி திருமண்காப்பணிந்து கொண்டு கையின் மிச்சமிருந்ததை வடுக நம்பிக்கு அணிவித்து, இருவருமாகக் கோவிலுக்குச் சென்றனர். அங்கு சென்றடைந்ததும் வடுக நம்பியைக் காணவில்லை. எம்பெருமானை ஸேவிக்கையில் தாம் வடுகருக்கணிவித்த திருமண் நம்பி நெற்றியில் இருக்கக் கண்டு "இவரே வடுகராய் வந்தார்" என்பதை அறிந்து "மாமாயனே! மாயம் செய்யே லென்னை" என்று வேண்ட, நம்பியும், 'தன் குருவின் தாளிணைக்கீழ் வாழ்ச்சியான தாஸ்ய ரஸத்தை அநுபவிக்க ஆசைப்பட்டோம். அதையறியாத நாட்டார்க்கு அதை நடத்திக் காட்ட விரும்பினோம். இன்றிறே அந்த அவா நிறைவேறியது. ஸ்ரீவைஷ்ணவ நம்பி என்றும் ராமாநுச நம்பி என்றும் தேவரீர் அருளிய தாஸ்ய நாமங்களால் தன்யனா னேன்'' என்று கூறி உடையவருக்கு எல்லாச் சிறப்புகளையும் அளித்து மகிழ்ந்தான். திருவநந்தபுரத்திலிருந்து ராமாநுசர் தனியாக குறுங்குடியில் கொண்டுவிடப்பட்டதால் அங்கு நின்றுவிட்ட ராமாநுசனடியார்கள் (வடுகநம்பியுட்பட) இவர் குறுங்குடியிலுள்ளமை அறிந்து இங்கு வந்து இங்கு நடந்த தெல்லாமறிந்து நம்பியையும் ஆசார்யரையும் தொழுது இன்ப மெய்தினர்.

இனி மாமுனிகளை எம்பெருமான் ஆசார்யனாக வரித்த வரலாற்றை அடுத்த இதழில் காணலாம்.

(தொடரும்)

# வாழி எதிராசன்! வாழி எதிராசன்!!

**சித்திரையில் செய்ய திருவாதிரை:** செங்கயல் வாவிகளும், வயல்களும் நிறைந்து செழித்து விளங்குகிறது ஸ்ரீபெரும்பூதூர். இவ்வூருக்குப் 'பூதபுரி' என்று பெயர். இவ்வூரில் கேசவ ஸோமயாஜி என்னும் மஹான் வாழ்ந்து வந்தார். இவர் பல யாகங்களைச் செய்தவர். பிங்கள ஆண்டு சித்திரைத்திங்கள் 13 ஆம் நாள் வியாழக்கிழமை சுக்ல பக்ஷ பஞ்சமி திருவாதிரை கூடிய நன்னாளில் கடக லக்னத்தில் திருவனந்தாழ்வானே (ஆதிசேஷனே) இவர்க்குத் திருமகனாராக அவதரித்தார். அவரே ஸ்ரீராமாநுஜர். வேதங்களைக் காப்பதற்காகப் பகவான் பல அவதாரங்களை மேற்கொண்டான்; வேதாந்தங்களையும் வேதார்த்தங்களையும் காப்பதற்காகத் திருவனந்தாழ்வான் ராமாநுஜனாக அவதரித்தார்.

## ஸ்தலசயனத்துறைவர்

**பிரம்மதேஜஸ்ஸைக் கண்டு ஓடிய பிரம்ம ரக்ஷஸ்:** காஞ்சிபுரத்தில் ஒரு சோழ அரசன் இருந்தான். அவனுக்கு ஒரே மகள்! அவளைப் பேய் பிடித்திருந்தது. யாதவப் பிரகாசர் (ராமாநுசனின் குரு) மந்திர தந்திரங்களில் வல்லவர் என்று அனைவரும் கூறிவந்தனர். இப்பேச்சு அரசனின் செவிகளிலும் எட்டியது. அரசன் யாதவப் பிரகாசரை வரவழைத்தான். அவரும் சீடர்கள் புடை சூழ மிக்க ஆடம்பரத்துடன் அரண்மனைக்குச் சென்றார். இளையாழ்வாரும் (ராமாநுசரும்) அவரோடு சென்றார். யாதவர் பேயை அச்சுறுத்தினர்; அவரது கட்டளைக்குப் பணிய பேய் மறுத்துவிட்டது ஆனால், அருகிலிருந்த இளையாழ்வாரின் தோற்றம் கண்டு நடுங்கியது அவரது ஆணையை ஏற்று அரசன் மகளை விட்டு ஓடிச் சென்றது. அரச

னுக்குப் பெருமகிழ்ச்சி ! அரசனும் அரசன்மகளும் இளையாழ் வாரின் (இராமாநுசரின்) அடிபணிந்து வாழ்ந்தார்கள்.

**கண்ணழகு படுத்தும்பாடு :** அகளங்கன் என்பவன் சோழர் சிற்றரசன். அவனுக்குப் பல மெய்காப்பாளர் இருந்தனர். அவர்களுள் ஒருவர் பிள்ளையுறங்காவில்லி. பொன் னாச்சி என்பவர் இவருடைய மனைவி. இவள் கண்ணழகு பெற்றவள்.

நல்ல வெய்யில் ! பொன்னாச்சி நடக்கிறாள் ; பிள்ளை உறங்கா வில்லி அவளுக்கு (தன்மனைவிக்கு)க் குடைபிடித்துச் சென்று கொண்டிருந்தார். (இது அக்காலத்தில் வியக்கத் தக்க செயல் !).

தெருவில் அனைவரும் அக்காட்சியைக் கண்டனர். இரா மாநுஜரும் இச்செயலைக் கண்டார். பிள்ளையுறங்கா வில்லியை அழைத்துவரச் செய்தார். 'அப்பா ! நீ பட்டப் பகலில் இவ்வாறு வெட்கமின்றிச் செய்யலாமோ ?' என்று கேட்டார். 'என்ன செய்வேன் ! இவளது கண்ணழகில் தோற்று நிற்கிறேன்' என்றார் உறங்காவில்லி. 'இவளைவிடக் கண்ணழகில் சிறந்தவரைக் காட்டினால் என்ன செய்வாய் ?' என்றார் இராமாநுஜர். 'அவ்வழகில் சொக்கி நிற்பேன்' என்றார் பிள்ளையுறங்காவில்லி. ராமாநுஜர் அவரைத் திரு வரங்கனிடம் (ரங்கநாதரிடம்) அழைத்துச் சென்றார். கரிய வாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டிருக்கும் அப் பெரியவாய கண்களைக் காட்டினார். அரங்கனின் கண் ணழகு திருப்பாணாழ்வாரின் மனத்தைப் பறித்ததுபோல், பிள்ளையுறங்காவில்லியின் உள்ளத்தையும் அபஹரித்தது. அரங் கனிடம் ஆட்படுத்திய ராமாநுஜரின் திருவடிகளையே ஆச்ர யித்தார் பிள்ளையுறங்காவில்லி. அதுமுதல் பிள்ளையுறங்காவில்லி தாஸரானார்.

**திருப்பாவை ஜீயர் :** இந்தப் பெயர் ராமாநுஜர் ஒருவருக்கே உரியது. பிரம்மசாரியும் ஸந்யாஸியும் பிக்ஷை கொண்டே புஜிக்க வேண்டும். ராமாநுஜர் மாதுகரத்திற்காகச் செல்லும் போதெல்லாம் திருப்பாவையை அநுஸந்தித்துக் கொண்டே செல்லுவது வழக்கம். ஒருநாள் பெரிய நம்பியின் திருமாளிகை வாசலில் வரும்போது 'உந்து மத களிற்றன்' பாசுரத்தை அர்த்தாநுபவத்தில் மூழ்கி சொல்லிக் கொண்டிருந்தார். 'செந்தாமரைக் கையால் சீரார் வளை யொலிப்ப வந்து திறவாய்' என்ற அடிகளை (மெய்மறந்து) அருளிச்செய்தார். அவரது குரலைக் கேட்டுப் பெரிய நம்பியின் குமாரத்தி அத்துழாய் கதவைத் திறந்தாள். அவளைக் கண்டதும் ராமாநுஜர் மூர்ச்சித்து விழுந்தார். அத்துழாய் பயந்து தன் தகப்பனாரிடம் ஓடினாள். 'ஐயா! ஜீயர் மூர்ச்சித்தார் என்றாள். 'உந்து மத களிற்றன் பாசுரமாக இருக்கும்' என்றார் பெரியநம்பி. அப்படியானால் என்ன என்றாள் அத்துழாய். நப்பின்னைப் பிராட்டியே தனக்கு உதவ வந்திருப்பதாக நினைத்திருப்பார்' என்றார் பெரியநம்பி. வேதமனைத்துக்கும் வித்தாகிற திருப்பாவையின் மீது ராமாநுஜருக்கு அளவு கடந்த அன்பு

**அருளிச் செயலில் வல்லமை பெற வேண்டுமா?** பகவானின் அநுக்ரஹம் மட்டும் பெற்றிருந்தாலும் போதாது ஆழ்வார்களின் அநுக்ரஹமும் அத்தனையதே! ஆனால் ராமாநுஜரின் அருள் இருந்தால்தான் அருளிச்செயல்களை ஓத முடியும்; மறவாமல் மனத்தில் வைத்துக் கொள்ளமுடியும். 'எங்கள் கதியே! ராமாநுச முனியே!...... மங்கையர் கோனீந்த மறையாயிர மனைத்தும் தங்கு மனம் நீ எனக்குத் தா! என்று முறையிட வேண்டும். ஏய்ந்த பெருங்கீர்த்தி ராமாநுசன் வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகிறேன்......... சீரார் சடகோபன் செந்தமிழ் வேதம் தரிக்கும் பேராத வுள்ளம் பெற' என்று வணங்க வேண்டும். இவ்வாறு செய்தால் அருளிச்செயலில் வல்லவனாக முடியும்.

**திருமண் இட்டுக் கொள்ள வேண்டுமா?:** மனையாள் இல்லாத வீட்டிற்கும், கோயில் இல்லா ஊருக்கும் அழகில்லை. யக்ஞோபவீதம் (பூணூல்) இல்லாத பிராமணனும், ஊர்த்வ புண்ட்ரம் (திருமண் காப்பு) அணிந்து கொள்ளாத ஸ்ரீவைஷ்ணவனும் விளங்கியதில்லை. ராமாநுஜருக்கும் யாதவப்ரகாசருக்கும் சாத்திர வழியில் வாதம் தொடங்கின. ஊர்த்வபுண்ட்ரம் தான் அணிந்து கொள்ள வேண்டுமா? அதற்குப் பிரமாணம் உண்டா? என்று யாதவப்பிரகாசர் கேட்டார். ராமாநுஜர் காட்டிய ஆதாரங்கள் பலவற்றுள் ஒன்றைக் காண்மின்:

உபவீதம் சிகாபந்தம் ஊர்த்வபுண்ட்ரம் விநா க்ருதம் |
அபவித்ரம் பரம் கர்ம விப்ரஸ்ய விபலம் பவேத் ||

யக்ஞோபவீதம், சிகை, திருமண் காப்பு இல்லாதவன் சிறந்த செயலைச் செய்தாலும் எதிர்பார்க்கும் பயன் கிட்டாது, என்று கூறினார்.

திருமண் காப்பு அணிந்து கொள்ளும் நெற்றியில் வேறொன்றைத் (திருமண் காப்புக்குப் பதிலாக) அணிகிறவன் மஹா பாபியாக 'ரௌரவம்' என்னும் நரகத்தை அடைகிறான் என்பதை

'ஸத்யஸ்சண்டாலகோபூத்வா ரௌரவம் நரகம் வ்ரஜேத்'

என்ற வாக்கியத்தைக் காட்டி விளக்கினார். திருமண் காப்பின் பெருமையையும், அதை அணிந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார். இதைப்போல் ஸமாச்ரயணம் செய்து கொள்ள வேண்டும் என்பதையும் பல பிரமாணங்களால் விளக்கியுள்ளார்.

**இராமாநுஜரின் அறிவுரைகள்:** ஸ்ரிய: பதியான திருமாலே பரதத்வம். நாம் அவனைச் சேர்ந்தவர்கள்.

கைங்கர்யமே புருஷார்த்தம். ஜாதிப்பித்து பயனில்லை. அனை வருக்கும் பகவானோடு தொடர்பு உண்டு. ஒற்றுமையாக வாழ வேண்டும். ஸ்ரீவைஷ்ணவ சமயமே சிறந்தது என்று ராமாநுஜர் சிறந்த அறிவுரைகளைக் கூறினார்.

**தொண்டு செய்து வாழ்ந்த தொண்டர் :** ராமாநுஜர் சுமார் நூற்றிருபது ஆண்டுகள் வாழ்ந்தார். ஸ்ரீரங்கத்தில் ரங்கநாதருக்குப் பல கைங்கர்யங்கள் செய்தார். திருப்பதியில் கோவிந்தராஜருக்குக் கோயில் கட்டினார். பல அரசர்களையும் தன்னிடம் தோல்விகண்ட சமயவாதிகளையும் ஸ்ரீவைஷ்ணவத்தில் சேர்த்தார். பல இடங்களில் மடங்களை நிறுவினார். விசிஷ்டாத்வைதத்தைப் பரப்பி, அதைக் கொண்டு மக்களிடையே அமைதியையும், ஒற்றுமையையும் நிலை நாட்டினார். ★


## ஸ்ரீ வைஷ்ணவ பத்ரி ஸ்பெஷல்

**92, டி. பி. கோயில் தெரு, சென்னை-600005.**

**3-5-79 முதல் 1-9-79 வரை**

**36 நாட்கள் ரயில் பிரயாணம்**

**விஜயவாடா, வால்டேர், (சிம்மாசலம்) பூரி, கல்கத்தா, கயா, காசி, அலகாபாத், அயோத்தியா, நைமிசாரண்யம், அரித்வாரம், ரிஷிகேசம், தேவப்பிரயாகை, பத்ரி நாராயணன், குருக்ஷேத்திரம்; டில்லி, மதுரா, பிருந்தாவனம், கோகுலம், ஆக்ரா, டாகூர், நாதத்துவாரகை, மூலதுவாரகை, பேட் துவாரகை, நாசிக், சூரத், பம்பாய், பண்டரீபுரம் புஷ்கரம்.**

**(இரு வேளை ஆகாரம் ரூ. 360, 2ம் வகுப்பு ரயில் கட்டணம் ரூ. 650, பத்ரி-டீலக்ஸ் பஸ் சார்ஜ் ரூ 160. 5 துவாரகைகள் ரூ. 150, மற்றும் சகல பஸ் சார்ஜ் ரூ. 210 உள்பட) 36 நாட்களுக்கு முதல் வகுப்பு ரூ 3600 2ம் வகுப்பு ரூ. 1530.**

# திருவாய்மொழியும் த்வயமும்

ஆகையிறே, ஸ்வரூப குணங்களிலோரறிவுமின்றிக்கே விக்ரஹாநுபவைக பரையாயிருக்கிற சிந்தயந்தி, "சிந்தயந்தி ஜகத்ஸூதிம் பரப்ரஹ்ம ஸ்வரூபிணம் நிருச்ச்வாஸதயா முக்திம்கதாந்யா கோபகந்யகா" "தச்சித்த விமாநாஹ்லாத க்ஷீணபுண்யசயா ததாததப்ராப்தி மஹாதுக்க விலீநாசேஷ பாதகா" என்று "ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" என்கிறபடியே புண்யபாப விதூநந பூர்வமாகப் பெற்று அநுபவிக்கக் கடவ நிரதிசயாநந்தரூபமான பரம ஸாம்யாபத்திரூப மோக்ஷத்தை கேவல விக்ரஹத்யாநத்தாலே பெற்றாள் என்றெழுதுகிறதும். "ப்ரஸாத பரமௌ நாதௌ மமகேஹ முபாகதௌ தந்யோ பிஹமர்ச்சயிஷ்யாமி இத்யாஹ மால்யோபஜீவந:" என்று பூவிலே கண்வைக்கில் ஸங்கம் செல்லுமென்று முகத்தை மாற

**வேளுக்குடி K. வரதாசாரியர்**

வைத்துத் தொடுத்து விற்று வயிறுவளர்க்கும்படி பதார்த்த வைலக்ஷண்யமறியாத மாலாகாரருமகப்பட, ஸ்வரூப குணங்களுக்கண்டு மறியாதே விக்ரஹதர்சநமாத்ரத்தாலே "நாத்தவம் ஸ்வரூபமாகையாலே கழற்ற வொண்ணாமை கிடக்கிறதத்தனை. தன்னைவிபே விஞ்சியிருப்பது இவ்வர்த்தம் ராஜமார்க்கத்தாலே போய் கம்ஸக்ருஹத்திலே புகாதே "நம்தெருவின்னடுவே வந்திட்டு" என்னும்படி நாளிருந்த முடுக்கத்தெருத் தேடிக்கொண்டு வந்தபோதே தெரியாதோ. நான்க்ருதார்த்தனானேன். தரித்ரனானவன் நிதியெடுத்தாப் போலே "வைத்தமாநிதி" "வைப்பாம்மருந்தாம்" என்கிற ஆயர் கொழுந்தாகிற நிதியைப்பெற்று அழித்துக் கெடுத்து உஜ்ஜீவிக்கப்பாரா நின்றேன்." என்று சொல்லும்படி ருசியே தொடங்கி மோக்ஷ பர்யந்தமான பேற்றுக்கெல்லாம் விக்ரஹமே ஹேதுவாக எழுதிற்றும்.

ஆக குணாதிகளையொழியவே விக்ரஹம் தானே விரோதி நிவ்ருத்தியையும் அபிமதப்ரதாநமும் பண்ணுமென்கிற ப்ராதாந்யத்தைப் பற்ற இவ்யமங்கள விக்ரஹத்தைச் சொல்லுகிறது "சரணௌ" என்று.

விக்ரேஹ உபாய பூதமாமாகில் விபவார்ச்சாவதார ரூபங்களைக் கண்டவர்கள் பகவத் விஷயத்தில் ப்ரவண ராகாதொழிவானென்னென்னில் ;— எல்லார்க்கும் ஒக்கக் காட்சி உண்டேயாகிலும், விஷயந்தான் ஸௌந்தர்யாதிகளை ஆவிஷ்கரியாமையாலே அந்யபரராகிறார்களல்லது, விக்ரஹத்துக்கு அந்தஸ்வபாவமில்லாமையன்று. ஆகையிறே பாஷ்யகாரர் "ஸௌந்தர்ய ஸௌசீல்யாதிகுண விஷ்காரேண அக்ரூரமாலாகாராதீந் பரம பாகவதாந்க்ருத்வா" என்றருளிச் செய்ததும்.

ஆனால் திருமேனியே ஸ்வதந்த்ரோபாயம் என்கிறபடியென்னென்னில் ;, குணங்களையொழியவே விக்ரஹகதமான ஸௌந்தர்யாதிகளை ப்ரகாசிப்பித்து ருசி ஜநகனுமாய் ஸவிக்ரனுமாய்க் கொண்டு பல ப்ரதாநம் பண்ணுமென்கிற ப்ராதாந்யத்தாலே சொல்கிறதல்லது அறிவுக்கு இரப்பிடமில்லாத திருமேனிக்குப் பல ப்ரதாந சக்தி உண்டென்கை "இதோ மலடி மகன் செல்கிறான்" என்றாப் போலே அஸங்கதமாம். ஆகையிறே அகாரத்தாலே கூறப்பட்ட பகவத் ரக்ஷணத்துக்கு விஷயபூதனாய் ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனுயுமுள்ள மகார வாச்யனான ஜீவனுக்கு தன்னை ரக்ஷித்துக் கொள்ளத் தனக்கு ப்ராப்தியில்லை என்கிறது நம : என்ற அநந்தர பதத்தாலே. இதிறே ஸ்ரீக்ருஷ்ணசரம ச்லோகத்தில் ஏகபதத்தாலும் அறுதியிடப்பட்டது. ஆக அறிவுக்கு இருப்பிடமான ஜீவனுக்கும் உபாயத்வத்தில் ஸம்பந்தமில்லை என்று அறிவுநடையாடாத அசேதமான பகவானுடைய திருமேனி உபாயம் என்னப்போமோ ? ஆக ருசி ஜநகத்வேந உபாயமாகக் கூறப்படுகிறது திருமேனி அவ்வளவேயாகும்.

ஸ்வரூபத்தையும் புருஷார்த்தத்தையும் இளைய பெருமாள் அறுதியிட்டாப்போலே ஆழ்வார் அறுதியிடுவரேயாகில் இளையபெருமாள் அறுதியிட்ட உபாயத்தையே ஆழ்வாரும் அறுதியிட வேண்டாவோ.

இளைய பெருமாள் "நச அஹமபிராகவ" என்று அவனை விட்டுத் தனக்கு ஸ்வரூபமில்லை என்றார். ஆழ்வாரும் "மராமரமெய்த மாயவன் என்னுள் இரானெனில் பின்னையா னொட்டுவேனோ" என்றார். ":பவாம்ஸ்துஸஹ வைதேஹ்யா கிரி ஸாநுஷுரம்ஸ்யதே. அஹம்ஸர்வம் கரிஷ்யாமி" என்று இளைய பெருமாள் மிதுந கைங்கர்யத்தைப் புருஷார்த்தமாக அறுதியிட்டாற் போல ஆழ்வாரும் "கோலத்திரு மாமகளோடு உன்னைக்கூட" என்றருளிச் செய்தார். இளைய பெருமாள் "ஸப்ராது: சரணௌ காடம் நிபீட்ய" என்று அவன் திருவடிகளையே உபாயமாகப் பற்றினாப்போலே ஆழ்வாரும் அவன் திருவடிகளையே உபாயமாக அறுதியிடுகிறார். இதிறே சரண சப்தார்த்தம். இதனைக் காட்டும் பத்து மூன்றும் பத்தாகும். ஆக ஸ்ரீமந்நாராயண சரணௌ என்று "திருவுடையடிகள் தம் நலங்கழல் வணங்கி" "நாதனே வந்து உன் திருவடியடைந் தேன்" "சீலமெல்லையிலானடி." "திருக்கமல பாதம் வந்து" "வண்புகழ் நாரணன் திண்கழல்" "நம்பிதன் நல்ல மாமலர்ச் சேவடி." "உன் பொற்றாமரையடி." "அருளுடையவன் தாள்" என்று வாத்ஸல்யம் தொடங்கி க்ருபாபர்யந்தமான குணவி சேஷங்களுக்கெல்லாம் ப்ரகாரகமான திருவடிகளைச் சொல்லிற் றாயிற்று.

இவ்விஷயங்களைத் திருவுள்ளம் பற்றிப் பிள்ளை உலகாரி யன் ஸாரஸங்க்ரஹத்திலே யருளிச் செய்கிறார். —"மூன்றும் பத்தால்," "நாண்மலராமடித்தாமரை" என்றும், "அங்கதிரடி யன்" என்றும், "அவன் பாதபங்கயம்" என்றும், "அன்று தேர் கடவிய பெருமான் கனைகழல்" என்றும், "மூவுலகும் தொழு தேத்தும் சீரடியான்" என்றும் நாராயணனுடைய ஸர்வலோக

சரண்யமான சரணாரவிந்தயுகளம் ப்ரதிபாதிதமாயிற்று'' என்று. இப்பாசுரங்களின் அர்த்தங்களை சற்றே யநுபவிப் போம் யாம்.

.சரணசப்தோபலக்ஷிதமான திருமேனியை ஆழ்வார் மூன் றும் பத்தில் திருவுள்ளம் பற்றியுள்ளார் என்பது ''முடிச்சோதி யாய்'' என்கிற மூன்றும் பத்து முதற் பாசுரத்தாலேயே விளங் குகிறது. முடிச்சோதி, அடிச்சோதி, படிச்சோதி, கடிச்சோதி என்று திருமேனியையும் திவ்யாவயவங்களையும் ஆதியிலே ப்ரஸ்தாவிக்கிறாரிறே. ''நாண்மலராம் அடித்தாமரை'' — நாட்பூ மலர்ந்தது என்னலாம்படி ஸுகுமாரமான திருவடித் தாமரைகள் என்றபடி. இதிறே துக்க நிவருத்திக்குக் குடிக்கிற வேப்பங்குடிநீர். பரம போக்யமென்று வாஸ்தவார்த்தம். ''அங்கதிர் அடியன்'' — அழகிய ஒளிவிடுகிற திருவடிகளையு டையவன் என்றபடி. ''பங்கயக் கண்ணன்'' என்று கூறப் பட்ட நோக்குக்கும், ''பவளச் செவ்வாயன்'' என்று கூறப் பட்ட மந்தஹாஸத்துக்கும் தோற்றார் விழும் திருவடிகள். ''அவன் பாதபங்கயம்'' — சேஷியான அவனுடைய பாதபங் கயம். நிரதிசயபோக்யமான திருவடிகள் என்றபடி. ''அன்று தேர் கடவிய பெருமான் கனைகழல்'' :— ஸேநாதூளியும் உழவுகோலும் சிறுவாய்க் கயிறும் தேருக்குக் கீழே நாற்றின திருவடிகளும் அதிலே சாத்தின சிறுச்சதங்கையுமான ஸாரத்ய வேஷத்தோடே நின்ற நீர்மை என்றபடி. ''மூவுலகும் தொழு தேத்தும் சீரடியான்'' :— குறைகுண நிருபணம் பண்ணாதே (அநாலோசிதவிசேஷ) அசேஷலோக சரண்யமான திருவடி என்றபடி.

ஆக மூன்றும் பத்தால் சரணசப்தார்த்தத்தை நிருபித்தா ராயிற்று ஆழ்வார்.

# ஸ்ரீஆசார்யன் பதில்கள்

சென்னை

பாபு

**கே: வைணவர்கள் பொதுவாக ஐயங்கார் எனப்படுவது ஏன்?**

ப: ஸ்ரீவைஷ்ணவர்கள் உபநயநம் செய்து கொண்ட பிறகு ஒரு ஆசாரியரிடம் பஞ்சஸம்ஸ்காரம் பெறுவது என்ற ஒரு சடங்கு உண்டு. அது பொதுவாக ஸமாச்ரயணம் (திருவிலச்சினை) எனப்படுகிறது. அந்தச் சடங்கில் ஐந்து அங்கங்கள் உண்டு. அதாவது சக்ராங்கனம், திருமண், தாஸ்ய நாமம், மந்த்ரோபதேசம், திருவாராதனம் ஆகியவற்றை ஆசாரியனிடமிருந்து பெறுகிறார்கள். இந்த ஐந்து அங்கங்களை உடையவர்கள் ஐயங்கார் எனப்படுகிறார்கள் எனலாம்.

பாம்பே

ராஜகோபாலன்

**கே: ஸ்ரீவைஷ்ணவர்கள் இல்லத்தில் உபயோகப்படுத்தப் படும் ஒரு பாத்திரத்திற்கு ராமாநுசன் என்ற பெயர் வரக் காரணம் என்ன?**

ஒரு ஸ்ரீவைஷ்ணவர் தம்முடைய மகனுக்கு ராமாநுசன் என்று பெயர் வைத்திருந்தாராம். அந்தப் பெயரை அடிக்கடி அன்பொழுகக் கூப்பிடுவதைக் கண்டார் மற்றொரு ஸ்ரீவைஷ்ணவர். அவருக்கோ பிள்ளை இல்லை. ஆனால் தாமும் அவ்வாறே அடிக்கடி அந்தத் திருநாமத்தை அன்புடன் உச்சரிக்க ஆசைப்பட்டார். ஆனால் ஆசாரியனைப் பெயர் சொல்லிக் கூப்பிட முடியாதே! எனவே ஸ்ரீராமாநுசரையே இதற்கு வழி கேட்டார். உடனே ஸ்ரீராமாநுசர், அந்த ஸ்ரீவைஷ்ணவர் உபயோகித்துக் கொண்டிருந்த ஒரு பாத்திரத்தைக் கையில் கொடுத்து இதையே ராமாநுசன் என்று கொள்ளும் என்று கூறினாராம். அதுமுதல் அப்பாத்திரம் ராமாநுசன் என்றே வழங்கப்படுகிறது. இது சில பெரியோர் சொல்லக் கேட்டிருக்கை. வல்லார் வாய் கேட்டுணர்க.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)—

★ அப்போது திருமலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஸ்ரீவிஷ்ணு அல்ல என்றும் அவன் பரமசிவனுசவோ காளியாகவோ, முருகனுகவோ இருக்கலாம் என்றும் சில சைவர்கள் கலகம் விளைவித்தனர். அப்போதே ஸ்ரீராமாநுஜர் திருமலைக்கு எழுந்தருளி உண்மையை நிலைநாட்டி திருவேங்கடமுடையானுக்கு சங்குச்சக்கரங்களும் ஸமர்ப்பித்தார். மீண்டும் ஸ்ரீரங்கம் திரும்பினுர்.

★ ஸ்ரீராமாநுஜர் மேல்நாடு எழுந்தருளியிருந்த போது தீவிரச் சைவனுன சோழவரசன் சிதம்பரத்திலிருந்த கோவிந்தராஜர் ஸன்னிதியை இடித்துத் தள்ளி மூலவரையும் கடலில் எறிந்து விட்டான். ஆனுல் உத்ஸவரை மட்டும் எப்படியோ திருமலையடிவாரத்திற்கு எழுந்தருளப் பண்ணிக் கொண்டு ஆராதித்து வந்தனர். இதையறிந்த ராமாநுஜர் திருப்பதியில் கோவிந்தராஜருடன் ஒரு மூலவரையும் ப்ரதிஷ்டை செய்தருளினுர். திருவேங்கடமுடையானையும் கோவிந்தராஜனையும் சமமாகவே பாவிக்க வேணும் என்றும் நியமித்தார். (இது கி. பி, 1130ல்)

★ இவ்வாறு பல கோயில்களிலும் பல சீர்திருத்தங்கள் செய்தார் ஸ்ரீரங்கம் திருநாராயணபுரம் முதலிய தலங்களில் அரிஜனங்கள் கோயிலுக்குள் சென்று வழிபட 'ஆலயப்ரவேசத்தை' நடத்தினுர். அவர்களுக்குத் திருக்குலத்தார். என்ற பெயரையும் சூட்டி பலகைங்கர்யங்களையும் நியமித்தார். எல்லா திவ்யதேசங்களிலும் உத்ஸவாதிகளில் திவ்யப்ரபந்த ஸேவாகாலங்களுக்கு வழிமுறைகளை வகுத்தார் இவ்வாறு பல சீர்திருத்தங்களைச் செய்தருளிய ஸ்ரீராமாநுஜர் இவ்வுலகில் 120 திருநக்ஷத்திரங்கள் வாழ்ந்திருந்து கி. பி. 1137ல் திருநாட்டுக்கு எழுந்தருளினுர்.

★ ஸ்ரீ ராமாநுஜருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த சில முக்யமான நிகழ்ச்சிகள் மட்டுமே இங்கு தொகுக்கப்பட்டிருக்கின்றன.

# எம்பெருமானாரும் அநந்தாழ்வானும்

T. A. ராஜகோபாலன்.

சித்திரை மாதத்திற்குப் பல சிறப்புக்கள் உண்டு. மாதங்களில் ஆரம்ப (ஆதி) மாதமாகிய இச்சித்திரை மாதத்தையே ஆதிசேஷனும் விரும்பினான். அதனால்தான் இராமாவதாரத்தின்போது இலக்குவனாக சித்திரை மாதம் அவதரித்தான். பின்னர் இராமாநுசனாக அவதரித்ததும் இச்சித்திரை மாதத்திலேயே. அவருடன் கூட அம்சாவதாரமாய் அநந்தாழ்வானாக அவதரித்ததும் இச்சித்திரை மாதத்திலேயே. இப்படி ஆதிசேஷன் ஒருவனே ராமாநுஜராகவும் அநந்தாழ்வானாகவும் அவதரித்தான். அதை இருவரும் நிரூபித்திருக்கிறார்கள். அதைச் சிறிது பார்ப்போம்.

ஒரு சமயம் எம்பெருமானாரைப் பரீக்ஷிக்க எண்ணிய ஜைனர்கள் பலர் தொண்டனூரில் ஒன்று கூடி "நாங்கள் 1000 பேர்கள் கேட்கிற கேள்விகட்கும் நீர் ஒரே சமயத்தில் பதிலளிக்க வேண்டும்" என்றார்கள். அப்படியே சொல்வதாக ஒத்துக் கொண்ட எம்பெருமானாரும் ஒரு நிபந்தனை விதித்தார். அதாவது தான் ஒரு திரை மறைவில் இருந்து விடையளிப்பதாகவும், அச்சமயம் ஒருவரும் திரை மறைவிற்கு வந்து பார்க்கக் கூடாதென்பதுமேயாகும். அவ்வாறே செய்வதாக ஒத்துக்கொண்ட அவர்களில் ஒருவர் திரை மறைவிலிருந்து எல்லாக் கேள்விகளுக்கும் ஒரே சமயத்தில் பதிலளித்துக் கொண்டிருந்த எம்பெருமானாரைக் காண வேண்டுமென்ற ஆசை மிகுந்து திரையை சிறிது நீக்கிப் பார்த்த போது எம்பெருமானார் தமது முதல் உருவான ஆதிசேஷனாக ஆயிரம் தலைகளுடன் உட்கார்ந்து கொண்டிருந்ததைக் கண்ட அவர் பயந்து போய் ஓடியே விட்டாராம். இவ்வாறு தான் ஆதிசேஷனின் அவதார மென்பதை மறைமுகமாக வெளிப் படுத்தினார் எம்பெருமானார்.

இவ்வாறே, திருமலை அனந்தாழ்வானும் தாம் ஆதிசேஷனின் அம்சாவதாரமென்பதை ஒரு சமயம் வெளிப்படுத்தினர். ஒருசமயம் திருமலையில் திருத்துழாய், புஷ்பம் முதலிய சேகரிக்கும்போது அவரை ஒரு அரவு தீண்டியது. அதைப் பொருட்படுத்தாத அவர், அவருடைய சீடர்கள் எவ்வளவோ சொல்லியும் வைத்தியமேதும் செய்து கொள்ளாமல் புஷ்கரிணியில் தீர்த்தமாடி பகவத் கைங்கர்யத்திலேயே ஈடுபட்டார். பிறகு புஷ்பமாலைகளை எடுத்துக் கொண்டு திருவேங்கடமுடையானுக்கு ஸமர்ப்பிக்கச் சென்றார். அப்போது திருவேங்கடமுடையானும் அவரைப் பார்த்து "உம்மை அரவு தீண்டிற்றென்றார்களே! ஏன் விஷத்தைத் தீர்த்துக் கொள்ளமுயலவில்லை" என்று கேட்டார். 'கடித்த பாம்பு வலிதாகில் விரஜா நதியில் நீராடி, எல்லா குற்றங்களும் நீங்கப்பெற்று ஸ்ரீ பூமி நீளா தேவிகளோடு ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் தேவரீருக்கு கைங்கர்யம் செய்யும் பேறு பெறுவேன். அல்லது கடியுண்ட பாம்பு (நான்) வலிதென்றால் அடியேன் திருக்கோனேரியில் நீராடிக் கொண்டு இங்கேயே அலர்மேல்மங்கையுறை மார்பரான தேவரீருக்குக் கைங்கர்யம் செய்து கொண்டிருப்பேன் ஆக பிரிவென்பதேயில்லை" என்று கூறித் தாம் ஆதிசேஷனின் அம்சாவதாரமென்பதை வெளிப்படுத்தினர்.

ஆக குரு, சிஷ்யர் இருவர் நிலையிலிருந்தும் தம்மைத்தாமே வெளிப்படுத்திக் கொண்ட ஒற்றுமையை இருவரிடத்தும் காணலாம்.

# திருமலை அநந்தாழ்வான் வைபவம்

## (திருமலை அநந்தாண்பிள்ளை வரதாசாரியார்)

ஸ்ரீ வைஷ்ணவ பரம்பரை சிறப்புற்று வளர, எம்பெருமானார் தம்முடைய கணக்கற்ற சிஷ்யர்களில் முக்கியமானவர்கள் சிலரைக் கொண்டு "எழுபத்து நான்கு ஸிம்மாஸனாதிபதிகள்" என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தினார். அவர்களுள் "திருமலை அநந்தாழ்வான்" ஒருவர்.

ஒருசமயம் எம்பெருமானார் பகவத் விஷய காலக்ஷேபம் நடத்தும்போது ஒருநாள் "ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி" என்கிற திருவாய்மொழிப் பாசுரம் வர, எதிரே கோஷ்டியாக வீற்றிருந்த சிஷ்யர்களை நோக்கி "ஆழ்வார் பாரித்த குறைதீர திருவேங்கடமுடையானுக்கு நித்ய கைங்கர்யம் செய்ய விருப்பமுடையார் ஆரேனுமுண்டோ" என்று வினவினார். கோஷ்டியில் 700 ஸந்யாஸிகள் பன்னீராயிரம் ஸ்ரீ வைஷ்ணவர்கள் இருந்தனர். "குளிரருவி வேங்கடம்" ஆகையாலே குளிருக்கு அஞ்சி ஒருவரும் வாய்திறவாது கவிழ்தலையிட்டு இருந்தனர். அநந்தாழ்வான் ஒருவரே கோஷ்டியில் எழுந்து கைகளைக் கூப்பி "அடியேனுக்கு நியமித்தருள வேணும்" என்ன அதுகேட்டு எம்பெருமானார் சந்தோஷமடைந்து "நீரொருவரே ஆண்பிள்ளை" என்று கொண்டாடி திருமலைக்கு விடை கொடுத்தனுப்பினார். அது முதலாக "திருமலை அநந்தாண்பிள்ளை" என்ற ப்ரஸித்தி ஏற்பட்டது.

ஒருசமயம் அநந்தாழ்வான் அமைத்த நந்தவனத்தில், இரவில் பெருமாளும் பிராட்டியும் ராஜதம்பதிகள் வேஷம் பூண்டு பழங்களைப் பறித்தும் பூக்களைக் கொய்தும் ரமிக்க, அவர்களை அநந்தாழ்வான் யாரோ கள்வர்கள் என நினைத்து துரத்திச் செல்ல, பெருமாள் ஓடிவிட, பிராட்டி (தாயார்)

அகப்பட்டுக் கொள்ள செண்பக மரத்தில் கட்டிவிட்டார். மறுநாள் கோயிலுக்குள் பெருமாள் திருமார்பில் பிராட்டியைக் காணுமல் எல்லோரும் அஞ்சி நடுங்க, அப்போது பெருமாள் அர்ச்சக முகமாக நடந்ததை விவரித்து, அநந்தாழ்வான், தனக்கு மாமனூர் ஸ்தானத்தில் இருந்து அலர்மேல் மங்கையாகிற பிராட்டியைத் திருக்கலியாணம் செய்துவைக்க நியமித்தான். அவ்வாறே அநந்தாழ்வானும் செய்தார். அது முதலாக அனந்தாழ்வான், மலையில் வேங்கடவர்க்கு மாமனூராக ஆனூர்.

ஒரு சமயம் திருவேங்கடமுடையானின் நந்தவனத்திற்காக ஒரு ஏரி வெட்டத் தொடங்கினூர் அநந்தாழ்வான். அப்போது அவருக்கும் கர்ப்பிணியான அவரது தேவியாருக்கும் மண்சுமந்து கொட்டுவதில் உதவி செய்ய, திருவேங்கடமுடையான் ஓர் அழகிய பிரம்மசாரி வேஷம் பூண்டு உதவி செய்ய வர, தம்முடைய கைங்கர்யத்தில் மற்றொருவர் புகுவதை விரும்பாத அநந்தாழ்வான் அவ்வுதவியை ஏற்க மறுத்தார். அவரது விருப்பத்திற்கு மாருக பெருமாள் அநந்தாழ்வான் தேவிக்கு உதவி செய்ய, அதுகண்டு கோபம் கொண்டு தூரத்திற் சென்று தம் கையில் இருந்த கடப்பாரையால் அந்த பிரம்மசாரியை அடிக்க அவனும் அடியுடன் கோயிலுக்குள் நுழைந்து மறைந்தான். மறுநாள் பெருமாள் முகவாய்க்கட்டையில் இரத்தம் பெருக, பெருமாளின் நியமனப்படி அநந்தாழ்வானைக் கொண்டு ஏழிலைப்பால் மாப்பூந்துகளை ஒற்றி இரத்தப் பெருக்கை நிறைவேற்றினர். இன்றைக்கும் தினமும் பெருமாளுக்கு மேற்படி ஐதிஹ்யத்தின் நினைவாக தோமாலை ஸேவைக்கு முன்னுல் பச்சை கற்பூர சாத்துப்படி நடக்கிறது.